பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | பங்குனி 04 | திங்கட்கிழமை | 20.03.2023 | கதிர் 131

## மட்டு - அம்பாறை எல்லை பிரச்சினை உடன் தீரவேண்டும்

### ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(சகா தேவராஜா)

காலாகாலமாக புரையோடிப்போய் பிரச்சினையாக இருந்து வருகின்ற அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பிரச்சினை இனியும்தொடரக்கூடாது. இரண்டு மாவட்டச் செயலர்களினதும் கலந்துரையாடலோடு ஜனாதிபதியின் இணக்கப்பாட்டோடுஇதுஉடன் தீர்க்கப்படவேண்டும்.

இவ்வாறு கல்முனை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனைப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்ஐந்துவருடங்களுக்கு பிற்பாடு வியாழக்கிழமைகல்முனை பிரதேச செயலாளர் எம்.லியாக்கத்தலியின் வழிகாட்டலில் அம்பாறைமாவட்டநாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான எஸ் எம் எம்.முஸரப் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது .

அச்சமயம் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் பிரபல சமூக சேவையாளருமான சந்திரசேகரன் ராஜன், மட்டு.அம்பாறை எல்லைப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்து உரையாற்றியபோது ☞2

## உள்ளூராட்சி சபை ஊழல்களை விசாரிக்க அரசு ஆணைக்குழு அமைக்கவேண்டும்

### முன்னாள் அமைச்சர் ஹசன் அலி வலியுறுத்து



உள்ளூராட்சி சபைகளின் ஊழல்களை விசாரிக்க தற்போதைய கொழும்பு ஆட்சி உடனடியாக விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், சுகாதாரதுறைமுன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். ரி. ஹசன்அலி வலியுறுத்தியுள்ளார்.

நிந்தவூரில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபை கள் 19 ஆம் திகதி நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டு உள்ளன. அதே நேரத்தில் பல சபைகளிலும் ஊழல்கள் இடம் பெற்று உள்ளன என்று குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது. ஊழல்கள் சபை உறுப்பினர்களுடன் சம்பந்தப்படுத்தி பேசப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. ☞2

## டொலருக்கு எதிராக
# ரூபாய் வழமைக்கு திரும்ப 4 ஆண்டுகளாவது செல்லும்
### ரணில் நேற்றுத் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 20

டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி பழைய நிலைக்கு - அதாவது பொருளாதார நெருக்கடிக்கு முன்பான நிலைக்கு - திரும்ப 4 ஆண்டுகள் ஆகும் என்று தெரிவித்திருக்கிறார் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

பிரதமரின் இல்ல மான அலரி மாளிகையில் ஞாயிற் றுக்கிழமை நடந்த இன்டரக்ட் மாவட்ட மாநாட்டில் கலந் துகொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை ஒப்பந்தம் செய்து கொண்டதன் பின்னர் டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி இன்னும் குறையும்.

ரூபாயை எப்படி நிலைப்படுத்துவது? டொலருடன் ஒப்பிடும் போது ரூபாய் 300க்கு மேல் 380 ரூபாய் வரை உள்ளது. ☞2

## இது ரகசியம் அல்ல!

வழித் தேங்காயை எடுத்து தெருப் பிள்ளையாருக்கு அடித்து அதைக் குரங்கு கொண்டு போனால் எப்படியிருக்கும்? இன்றைக்கு அது மாதிரியான ஒரு கதையைத்தான் உங்களுக்குச் சொல்லப் போகின்றேன்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாக அவர்களைக் கைது செய்வதுடன், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டும் வருகின்றன. இரு நாடுகளுக்கும் இடையிலான உடன்படிக்கைகளின்படி மீனவர்கள் எப்படியும் விடுவிக்கப்பட்டுவிடுகிறார்கள். இப்போது அவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டு விடுவிக்கப்படும் நடைமுறையும்கூடக் காணப்படுகின்றது.

ஆனால், அவர்களின் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் அவற்றின் உரிமையாளர்களால் நீதிமன்றங்களில் வழக்காடப்பட்டால் தவிர உடனடியாகவே அரசுடமையாக்கப்படுகின்றன. அண்மையில் அப்படி வழக்காடிய 4 படகுகளை, அவற்றைப் பராமரித்தமைக்கான ☞2

## மதுவரி மூலமான வருமானத்தில் வீழ்ச்சி

ஆண்டின் முதல் இரு மாதங்களிலும் மது மீதான வரியால் கிடைக்கும்வருமானம் பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக மது வரித் திணைக்களம் கவலை தெரிவித்துள்ளது.

ஜனவரி மற்றும் பெப்ரவரிமாதங்களில் திணைக்களத்திற்குக் கிடைத்திருக்க வேண்டிய வரி 35 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள் ளதாக திணைக்களப் பேச்சாளர், மேலதிக ஆணையர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

மது வகைகள் மீதான வரி அதிகரிக்கப்பட்டபோதும் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வருடத்தில் 217 மில்லியன் ரூபாய் வருமானத்தை எட்டுவதற்கு திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## டொலர் பிரச்சினை முடிவுக்கு வந்தது

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

இலங்கையின் டொலர் பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார். அத்தியாவசிய தேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் போதுமான டொலர் தற்போது நாட்டில் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்குவழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த நேர்காணலில் அவர் முக்கியமாகத் தெரிவித்துள்ளதாவது:

டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி ☞2

## காங்கேசன் - காரைக்கால் படகு சேவை இந்தியாவினாலேயே கையாளப்படும்

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திற் கும் காரைக்காலுக்கும் இடையிலான படகுச் சேவையை இந்திய அதிகாரிகளே முழுமையாகக்கையாளப்போகின்றார்கள் என்றும் இலங்கை அதற்கான ஆதரவை மட்டுமே வழங்கும் என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறைக்கும் இந்திய தெற்குத் துறைமுகமான காரைக்காலுக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவை அடுத்த மாத இறுதிக்குள் தொடங்கப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிவித்தார்.

இந்திய அதிகாரிகளால் கையாளப்படும் இந்த படகுச் சேவைக்கு இலங்கை உதவிகளை மாத்திரமே செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்வரும் மற்றும் வெளியில் செல்லும் பயணிகளுக்கான களஞ்சிய வசதிகள் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் உட்பட சுங்க பிரிவு மற்றும் குடிவரவுப் ☞2



## இலங்கையை மீட்டெடுக்க பொதுத் தேர்தலே தேவை

### முன்னாள் அமைச்சர் ரிஷாத் வலியுறுத்து

(நூருல் ஹூதா உமர்)

உள்ளூராட்சி மன்ற தேர்தலின் மூலம் இப்போதைய நிலையில் நாட்டுக்கு நன்மை கிடைக்காது என்று கூறி தேர்தலை இழுத்தடிக்க முனைவோர், உடனடியாக நாடளுமன்ற தேர்தலை நடத்த முன்வரவேண்டும். அத்தேர்தலின் மூலம் உருவாக்கப்படும் ஆட்சி நாட்டு மக்களினதும் ☞2



## நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பை ரணில் விடமுடியாது

### ஜே.வி.பி. விஜித ஹேரத் தெரிவிப்பு



அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்த வருடம் ஜனாதிபதி தேர்தலுக்கான அழைப்பை விடுக்க முடியாது என்றுதேசியமக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசமைப்பின்40ஆவது சரத்தின்படி, ஐந்தாண்டுகள் முழு பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அதிகாரம் இல்லை என்று அவர் செய்தியாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

அரசமைப்பின்40ஆவது சரத்தின் உப பிரிவுகளின்படி, மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு மட்டுமே இரண்டாவது முறையாக போட்டியிட்டால், முழுப் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்துக்கு முன்னதாக ☞2

## முல்லைத்தீவு சம்மேளனத்திற்கு வழங்கப்பட்ட 50 அடி நீளமான இந்திய ட்ரோலர் மூழ்கடிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.20

இந்திய மீனவர்களிடம் இருந்துபறிமுதல்செய்யப்பட்டு முல்லைத்தீவு மீனவர் சம்மேளனத்திற்கு வழங்கப்பட்ட பெரும் இழுவை மடிப் படகு நேற்றிரவு திடீரென கடலில் மூழ்கியது. நாசவேலைமூலம் இந்தப் படகு மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம்என்றுசந்தேகிக்கப்படுகின்றது.

இலங்கைக் கடற்பரப்பிற்குள்அத்துமீறிஊடுருவி மீன்பிடித்தசமயம்இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தினால்பலபடகுகள்அரசுடமையாக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அரசுடமையாக்கப்பட்ட படகுகளில் சிலவற்றை மீன்பிடித்துறைஅமைச்சர்டக்ளஸ் தேவானந்தா வடபகுதியில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றார்.



அண்மையில்அத்தகைய இரு பெரும் இழுவைப் படகுகள் முல்லைத்தீவு மற்றும் பருத்தித்துறை மீனவர் அமைப்புக்களுக்கு அமைச்சரால் வழங்கப்பட்டன. 50 அடி நீளமுள்ள பெரும் இரும்பு இழுவை மடிப் படகுகளான இவை இந்தியப் பணமதிப்பிலேயே ஒன்றேகால் கோடி ரூபா பெறுமதியானவை என்று சொல்லப்படுகின்றது. ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கட்டணங்களைச் செலுத்திய பின்னர் எடுத்துச் செல்ல ஊர்காவற்றுறை நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. அப்படி வழக்காடப்படாத 8 படகுகள் அரசுடமையாக்கப்பட்டன.

கடந்தகாலங்களில்இப்படி அரசுடைமையாக்கப்பட்ட படகுகள் நீண்ட காலத்தின் பின்னர்ஏலம்விடப்பட்டபோது அவை பயன்பாட்டுக்கு உரியவை அல்ல என்ற அடிப்படையில் பழைய இரும்பு விலைக்கு விற்கப்பட்டிருந்தன. பல கோடி ரூபா பெறுமதியான அந்தப் படகுகள் சில லட்சங்கள் பெறுமதிக்கு பழைய இரும்புக்கு விற்கப்பட்டன. அதிலும் நல்ல நிலையில் இருந்த சில படகுகளைக் காணவில்லை. அப்படிக் காணாமற்போன படகுகள் குறித்து விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை? யாரும் அதைப் பற்றி அலட்டிக் கொள்ளவும் இல்லை.

இதற்கிடையில் இரண்டு மாதங்களின் முன்னர் இந்திய மீனவர்கள் எல்லை மீறி இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்து தொழில் செய்வதை எதிர்த்து குருநகர் மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறீதர் தியேட்டர் முன்னாள் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். தியேட்டரில் இருந்து வெளியே வந்த அமைச்சர், மீனவர்கள் மத்தியில் பேசும்போது, இந்திய மீனவர்களை உங்கள் (குருநகர்) படகுகள் சிறியவை அவற்றால் இந்திய மீனவர்களின் படகுகளை நெருங்க முடியாது, எனவேஇந்தியமீனவர்களைப் பிடிக்கவும் இடிக்கவும் உங்களுக்குநான் இந்திய மீனவர்களின் பெரிய இரும்புப் படகுகளே தருகின்றேன் என்று வாக்குறுதியளித்தார்.

இரண்டு வாரங்களில் அந்தப் படகுகளைத் தான் தருவார் என்று அமைச்சர் அன்று வாக்குறுதியளித்திருந்தார். இரண்டுவாரங்களில் படகுகள் கையளிக்கப்படவில்லை என்றாலும் பல வாரங்கள் கழித்து 4 படகுகள் மீனவர்சங்கங்களுக்குகையளிக்கப்பட்டன. அவற்றில் ஒன்று பருத்தித்துறை மீனவர் சங்கத்திற்கும் மற்றொன்று முல்லைத்தீவு மாவட்ட மீனவர்சம்மேளனத்திற்கும் கையளிக்கப்பட்டன.

50 அடிநீளமுள்ள பெருய இழுவை மடிப் படகுகள் இவை. பொட்டம் ட்ரோலிங் எனப்படும் தொழில்முறை இழுவை மடிப்படகுகள் இவை. இவற்றின் தொழில் முறையால்தான் கடல் வளம் நாசமாக்கப்படுகின்றது. அந்தப் படகுகளில் இழுவை மடித் தொழில் செய்வதற்கு பொருத்தப்பட்டுள்ள இரும்பு உபகரணத் தொகுதியை அகற்றிவிட்டு (அது மட்டுமே இந்தியப் பண மதிப்பில் 10 லட்சம் ரூபா பெறுமதியாம்) இந்தப் படகுகள் மீனவர் அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டன.

மீனவர்அமைப்புக்களும் அவற்றை உடனடியாகத் திருத்தி இயங்கு நிலைக்குக் கொண்டு வந்து தத்தமது இடங்களுக்கு எடுத்துச்சென்றன. முல்லைத்தீவு சம்மேளனத்திற்கு வழங்கப்பட்ட படகு அங்கு எடுத்துச் செல்லப்பட்டுதொழிலில்ஈடுபடுத்துவதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. தொழிலுக்குச் செல்வதற்காக 200 லீற்றல் டீசலும்கூட அமைச்சரின் பரிந்துரையில் வழங்கப்பட்டதாகவும் தெரி விக்கப்பட்டது. ஆனால் திடீரென சனிக்கிழமை நள்ளிரவில் அந்தப் படகு கடலில் மூழ்கிவிட்டது.

நன்றாக நின்ற படகு, சில தினங்களுக்கு முன்னர்தான் திருத்த வேலைகள் எல்லாம் பார்க்கப்பட்டு படகு தொழிலுக்குச் செல்வதற்கான தர நிர்ணயம்உறுதிசெய்யப்பட்ட படகு, திடீரென கடலில் மூழ்கி விட்டது என்றால் அதன் பின்னால் சதி வேலை நடந்திருக்கிறது என்ற பலமான சந்தேகம் இருக்கின்றது. படகு மூழ்கிய சமயத்தில் அந்தப் பகுதியில் வேறு மீனவர்கள் தொழில்சார் நவடிக்கைகளில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். மூழ்கிய படகுக்குப் பக்கத்தில் வேறு சிறு படகுகள் ஏதும் வந்ததற்கான அறிகுறிகள் எவையும் இல்லை என்கிறார்கள். அப்படியானால் எப்படிப் படகை நெருங்கி யாராவது நாசவேலை செய்திருக்க முடியும் என்பது பெரும் கேள்வி.

உள்ளூரில் இது பற்றி தோண்டித்துருவிப் பார்த்தால், இந்தப் படகு முல்லைத்தீவு சம்மேளனத்தின்தலைவரிடம் ஒப்படைக்கப்படுவதற்குக் கடும் எதிர்ப்பு இருந்திருக்கிறது. அவவர் அமைச்சர் டக்ளஸிற்கு நெருக்கமானவர். அவரது கட்சியில் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிடுபவர். அதாவது அவர் தன்னுடைய ஆள் என்பதால்தான் அமைச்சர் அவரிடம்படகைஒப்படைத்தார் என்ற கருத்து உள்ளூரில் ஆணித்தரமாக நிலவுகின்றது. அப்படிஒப்படைக்கவேண்டாம் என்கிற எதிர்ப்பும் அப்படிக் கொடுத்தால் முல்லைத்தீவில் இந்தப் படகை எத்தனை நாள்களுக்கு நிறுத்தி வைத்திருக்கிறார்கள் பார்ப்போம் என்கிறசவால்களும்முல்லைத் தீவில் தாராளமாகப் புழக்கத்தில் இருந்தன என்கிறார்கள்.

இந்தப் பின்னணியில் பார்த்தால் படகின் கீழ்ப் பகுதியை உடைத்து தண்ணீர் விரைவாக உள்ளே புகுந்து படகை மூழ்கடிக்கத்தக்க வகையில் சரியான இடத்தில் அதனை உடைத்து கச்சிதமாகக் காரியத்தை அரங்கேற்றியிருக்கிறார்கள் என்கிற கருத்து மீனவர்கள் மத்தியில் நிலவுகின்றது. இதைச் செய்வதற்கு படகு வரைக்கும்நீரடிநீச்சலிலேயே செல்லத்தக்க பயிற்சியும் திறமையும் உடையவர்களே பயன்படுத்தப்பட்டிருப்பார்கள் என்றும்சொல்லப்படுகின்றது. அது தவிர வேறு வழிகளில் படகு மூழ்கடிக்கப்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்பது தான் உள்ளூர் மீனவர்களின் ஆணித்தரமான கருத்து.

இப்போது படகு முற்றிலுமாகமூழ்கிவிட்டது. கடற்படையினர் மூன்று மணி நேரம் முயன்றும்படகைக்காப்பாற்ற முடியவில்லை. அது கடலோடு சமாதியாகிவிட்டது. பிரச்சினை அத்தோடு முடிந்ததா என்றால் அதுதான் இல்லை. அமைச்சருக்கு ஆப்பு வேறு விதத்தில் வந்து இறுகியிருக்கிறது.

மூழ்கடிக்கப்பட்ட அந்தப் படகின்இந்தியஉரிமையாளர் மாணிக்கசாமி செல்வமணி நேற்றுஇந்தியாவின்மீன்வளத் திணைக்களத்திடம் ஒரு முறைப்பாடுவழங்கியுள்ளார். தனது விசைப்படகு தொழிலாளர்களுடன் மீன்பிடிக்கச் சென்ற சமயம் இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்டது. அதனை எதிர்த்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நான் வழக்குத் தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கில் மார்ச் 27 என்னை நீதிமன்றத்திற்கு வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எனது படகை முல்லைத்தீவுமீனவர்சங்கத்திற்கு வழங்கியிருக்கிறார். அந்தப் படகு அங்கு பாதுகாப்பற்று நங்கூரமிட்டுநிறுத்திவைக்கப்பட்டிருந்ததை நான் படத்தில் பார்த்திருக்கின்றேன்.. இப்போது அந்தப் படகை அங்குள்ள மீனவர்கள் மூழ்கடித்து விட்டார்கள் என்று செய்தி வருகின்றது. எனவே எனது படகை மீட்டு அதனைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்என்றுஅவர்தனது முறைப்பாட்டில்கேட்டுள்ளார்.

அமைச்சர் இந்திய மீனவர்களை இடிக்கவும் பிடிக்கவும் அவர்களின் படகையே தருவதாக இலங்கை மீனவர்களைக் கொம்பு சீவி விட்டார். இப்போது இரு பகுதி மீனவர்களும் சேர்ந்து அவருக்கு ஆட்டம் காட்டி விட்டார்கள்.

*******

நேற்றைய காலைக் கதிரில், யாழ். சிங்கள ம.வி. காணி இனி நிரந்தரமாகப் பாடையினருக்குஎன்றதலைப்பிலல் வெளியான செய்தி தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர் அ.உமாமகேஸ்வரன் ஒரு மறுப்புத் தெரிவித்திருக்கிறார். அதில், யாழ். சிங்கள ம.வி. காணியை நிரந்தரமாகத் தரைப்படையினருக்கு வழங்குவதில் எமக்கு ஆட்சேபனை இல்லைஎனமாகாணக்கல்வி அமைச்சு பதிலளித்துள்ளது என காலைக்கதிர் பத்திரிகையில் இன்றைய தினம் (ஞாயிறு) வெளியாகிய செய்தி தவறானது. என்பதுடன் அவ்வாறான எந்தவொரு கடிதமும் கொழும்பு கல்வி அமைச்சுக்கு அனுப்பப்படவில்லை என்பதையும் அறியத்தருகின்றேன் என்று தெரிவித்திருக்கிறார். அவர் சொல்வது உண்மைதான். நவம்பரில்கல்விஅமைச்சுக்கு அந்தக் கடிதம் கிடைத்திருந்த போதும் அதற்கு மாகாணக் கல்வி அமைச்சு இதுவரை பதிலளிக்கவில்லை.

ஆனால், அந்தக் கடிதம் கல்வித் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டு, யாழ்ப்பாணம் கல்வி வலயத்தினால் அந்தக் காணியை வழங்குவதில் தமக்கு ஆட்சேபனை ஏதும் இல்லைஎன்கிறபதில்கடிதமும் வழங்கப்பட்டுவிட்டதுஎன்பதை உறுதிப்படுத்திக்கொண்டே காலைக்கதிர் செய்தி வெளியிட்டது. சம்பந்தப்பட்ட கல்வி வலயமே அந்தக் காணியைப் படையினருக்கு வழங்குவதற்குஆட்சேபனைஇல்லை என்று தெரிவித்துவிட்ட பின்னர், அதைத் தடுப்பதற்கான வாய்ப்போ, தற்றுணிபோ அரச அலுவலக நடைமுறைகளில் மிகக் குறைவு என்கிற காரணத்தால் அந்தச் செய்தி இனி நிரந்தரமாக அந்தக் காணி படையினருக்கே என வரையப்பட்டது.

- இடி மின்னல் -

## சர்வதேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையானது நாளையதினம் கூடவுள்ள நிலையில் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான 2.9பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கவுள்ளதாக நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சர்வ தேச நாணய நிதியத் தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி அனுமதி கிடைக் கப்பெற்றவுடன், இம்மாதத் திற்குள் 330 மில்லியன் டொலர்கள் இலங்கைக்கு வழங்கப் படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் பல்வேறு மட்டங்களில்பேச்சுக்கள்முன்னெடுக்கப்பட்டன. அதனடிப் படையில் பணியாளர் மட்ட உடன்பாடுகள் எட்டப் பட்டுள்ளன. எனினும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டநிபந்தனைகளை நடைமுறைப்படுத்தல், இரு தரப்பு பெரும் கடன் வழங்குனர்களிடமிருந்து நிதி உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளல் ஆகிய செயற்பாடுகளில்தாமதங்கள் ஏற்பட்டன.

இதனால் கடன் உதவியிலும் தாமதமங்கள் ஏற்பட்டிருந்தன. எனினும், கடந்த வாரம் சீனாவும் கடன் மறுசீரமைப்பிற்கான நிதி உத்தரவாதத்தை வழங்கியதையடுத்து, நாணய நிதியத்திடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் எவ்விதமானபிரச்சினைகளும் தற்போது காணப்படவில்லை. ஆகவே சர்வதேசநாணயநிதியத்தின் உதவி நிச்சயமாக கிடைக்கப்பெறும் - என்றார்.

## மட்டு - ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்குஉறுப்பினர்ராஜன் பேசுகையில். தெரிவித்ததாவது:

அம்பாறைமாவட்டத்தின் வடக்கு எல்லை, மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கு எல்லை என்பன இதுவரை காலமும் தீர்க்கப்படாமல் இரண்டு மாவட்டத்திற்கு இடை யில், ஏன் ஒரே சமூகத்திற்கிடையில் முரண்பாடுகளை, பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

கல்முனை மாநகர சபையினுடைய எல்லை வை ஜங்ன். கார்ட் வீதி என சொல்லப்படுகின்றது. இருந்தபோதும் களுதாவளை பிரதேச சபையினுடைய எல்லை எது? என்பது தெளிவாக சொல்லப்படாததன் காரணமாகஒரேசமூகத்தைச்சேர்ந்த பெரிய நீலாவணை, பெரிய கல்லாறு மக்களுக்கிடையே பல காலமாக முரண்பாட்டுத் தன்மையும்பிரச்சினைகளும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்தப் பிரச்சனைக்கான சுமூகமானதீர்வினைபெற்றுத் தந்து இரு மக்களையும் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழி வகுத்து தருமாறு வேண்டுகிறேன். என்று வேண்டுகோள் விடுத்தார்.



யாழ்ப்பாணம், நாவற்குழியில் உள்ள விகாரைக்கு வழிபாடு மற்றும் கலசம் வைப்பதற்காக வந்த முப்படைகளின் பிரதானியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் வருகையை எதிர்த்து இனப்படுகொலையாளியே திரும்பிப்போ என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் போராட்டம் நடத்தினர். போராட்டம் நடந்துகொண்டிருந்தபோதே அதனைத் தாண்டி, பிக்குகளும் சிங்கள பக்தர்களும் ஊர்வலமாக விகாரைக்குச் சென்றார்கள். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

## உள்ளூராட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எனவே சபைகளை கலைத்து விட்ட கொழும்பு ஆட்சியாளர்களேஊழல்கள்தொடர்பாக விசாரிக்க உடனடியாக விசேட ஆணைகுழு ஒன்றை நியமிக்க வேண்டும். நாடு இன்று எதிர்கொண்டு உள்ள பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் ஊழல், எனவே அது குறித்த விசாரணை உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

ஊழல் பெருச்சாளிகளை மக்கள் அடையாளம் காண வேண்டியது அவசியம். அப்போதுதான் எதிர்காலத் தேர்தல்களில் சரியானவர்களுக்கு வாக்களிப்பார்கள். இதற்காகவும் உடனடியாக ஊழல் விசாரணை நடத்தப்பட்டு ஊழல் பெருச்சாளிகள் அம்பலப் படுத்தப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம்.

இதேநேரம் கலைக்கப்பட்ட சபைகளின் நிர்வாகம் மாகாணஆளுனர்களுக்குகீழ் கொண்டுவரப்படவேகூடாது. மேலும் கலைக்கப்பட்ட சபைகளின்நிர்வாககட்டமைப்புக்குள் எந்த வகையிலும் கலைக்கப்பட்டஉறுப்பினர்கள் மீண்டும் உள்ளீர்க்கப்படவும் கூடாது.

ஏனென்றால் சபைகளில் இடம்பெற்று இருக்கக் கூடிய ஊழல்கள் மறைக்கப் படவும், ஊழல்களோடு சம்பந் தப்பட்டிருக்கக் கூடிய உறுப்பினர்கள் காப்பாற்றப்படவும் இவை வழி ஏற்படுத்தி விடும்.

## காங்கேசன் - ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பகுதிகளைநிர்மாணிப்பதற்காக இதுவரை 100 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நிமல் டி சில்வா தெரிவித்தார்.

## டொலர் பிரச்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிகரித்ததைத் தொடர்ந்து தேவையான அளவு டொலர் இருப்பு நாட்டில் உள்ளது.

பன்னாட்டு செலாவணி நிதியம்(ஐஎம்எவ்)பணிப்பாளர் சபை மார்ச் 20 (இன்று) கூடும்போது இலங்கையின் 2.9 மில்லியன் கடனுக்கான சம்பிரதாயபூர்வ அனுமதியை வழங்கும். இதன் மூலம் முதற் கட்டமாக மொத்தம் 3.9 மில்லியன் டொலர் நிதி இலங்கைக்குக் கிடைக்கும். மார்ச் 21 அன்று அந்த நிதி இலங்கைக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இரு தரப்பு கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுக்கள் ஜூன் மாதமளவில் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கின்றோம். - என்றார்.

## இலங்கையை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சர்வதேசத்தினதும் நல்லபிப்பிராயத்தை கொண்டதாக அமையும். அது நாட்டுக்கு பல்வேறுவிதத்திலும்நன்மை பயக்கும். அரசமைப்பின்பால் கவனம் செலுத்தி ஜனநாயகத்தை வலியுறுத்தி உடனடியாக தேர்தலுக்கு சொல்ல வேண்டியது கட்டாயம்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்களின் சேவைக் கால விடுகையும், நிந்தவூர் பிரதேச சபை வேட்பாளர்கள் அறிமுகமும் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிரதித் தேசிய அமைப்பாளருமானஎம்.ஏ. அஸ்ரப்தாஹீரின் தலைமையில் சனிக்கிழமை இரவுநிந்தவூரில்இடம்பெற்றது. அங்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டுதொடர்ந்தும் உரையாற்றிய ரிஷாத் மேலும் தெரிவித்ததாவது:

69 லட்சம் மக்களின் வாக்குகளினால் ஜனாதிபதியாக, பிரதமராக, அமைச்சர்களாக ஆட்சி அமைத்த ராஜபக்ஷவினர் மக்களினால் துரத்தப்பட்டதை அடுத்து மக்களால் நிராகரிக்கப்பட்டு தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம்சென்றரணில் ஜனாதிபதியாகவும், இரண்டு நாடாளுமன்றஉறுப்பினர்கள் மட்டுமே கொண்டவர்

பிரதமராகவும் ஜனநாயகத்தை நிலைநாட்டதடையாக இருக்கிறார்கள்.

தேர்தலை நடத்துமாறு நாடாளுமன்றில் மக்கள் பிரதிநிதிகள் எழுப்பும் குரலுக்கு அவர்கள் பதிலில்லாமல் இருக்கிறார்கள். நீதிமன்ற அறிவிப்பு,சர்வதேசநாடுகளின் கோரிக்கைகள், தேசிய சிவில் அமைப்புக்களின் கோரிக்கைகளைகூட இவர்கள் நிறைவேற்ற தயாரில்லை. ஜனநாயகத்தை இவர்கள் கேலிசெய்கிறார்கள். தேர்தலை நடத்தவிடாமல்பின்னணியில் இருந்துகொண்டுதடுப்பவர்கள் ராஜபக்ஷவினரும், அவர்களின் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களுமே.

நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்றைநடத்தினால்ராஜபக்ஸ குடும்பத்தின்நிகழ்ச்சிநிரலுக்கு கீழ் இயங்கும் இந்த ஆட்சி நிச்சயம் படுதோல்வியைச் சந்திக்கும். இந்த ஆட்சிநாட்டைக் குட்டிசுவராக்கி இன்றைய நிலைக்கு உட்படுத்திய ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றுவதிலையே குறியாக இருக்கிறது. மக்களைப் பற்றி எந்த கவலையும் அவர்களிடம் இல்லை.

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதா? இல்லையா என்ற இழுபறிக்கு செல்ல முன்னர் திடமான தீர்மானத்தை எடுத்திருக்கவேண்டும். மக்களையும் ஏமாற்றி சர்வதேசத்தையும் ஏமாற்றி காலத்தை கழித்துக் கொண்டிருக்கும் இந்த ஆட்சி உள்ளூராட்சிமன்றதேர்தலின் மூலம் இப்போதைய நிலையில் நாட்டுக்கு நன்மை கிடைக்காது என்று நம்பினால் உடனடியாகபொதுத்தேர்தலை நடத்த முன்வர வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ரூப், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நவம்பரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதித் தேர்தலை நடத்த அதிகாரம் உள்ளது என்றார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருந்திருந்தால் இந்த வருடம்நவம்பர் மாதத்திற்குப் பிறகு ஜனாதிபதித் தேர்தலை நடத்தியிருக்க முடியும் என்று கூறிய அவர், அடுத்த ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவுக்கு அத்தகைய அதிகாரம் இல்லை என்றும் கூறினார்.

2024ஆம் ஆண்டு நவம்பருக்குப் பின்னரே ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும் என்று தெரிவித்த அவர், அந்தத் தேர்தலை எதிர்பார்த்து உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும் தெரிவித்தார்.

## முல்லைத்தீவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எம்.எஸ்.ராஜ்குமார் என எழுதப்பட்ட இந்தியப் பதிவு இலக்கம் 992 கொண்ட படகு முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சம்மேளத்தின் தலைவர்நாதனிடம்வழங்கப்பட்டது. இந்தப் படகை திருத்தி, கடந்த 13ஆம் திகதி மயிலிட்டி துறைமுகத்தில் இருந்து முல்லைத்தீவிற்குக் கொண்டு சென்றிருந்தனர். கடலில் நங்கூரமிடப்பட்டு கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது.

சனிக்கிழமை இரவு 12 மணியளவில் படகு கடலில் மூழ்குவதைச் சிலர் கண்டனர். உடனடியாக படகைக் காப்பாற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டன. முல்லைத் தீவுக் கடற்படையினருக்கும் அறிவிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் டோறாப் படகுகளில் வந்த அவர்களும் படகை மீட்பதற்கு 3 மணி நேரமாகப் போராடிப் பார்த்தனர். எந்த முயற்சிக்கும் பயனில்லாமல் படகு தண்ணீரில் முற்றாக மூழ்கிவிட்டது.

படகு நின்றிருந்த இடத்தையொட்டிய 11 மணியளவில் பெரிய சத்தம் ஒன்று கேட்டதாக இப்போது தெரிவிக்கப்படுகின்றது. படகில் இருந்து நீர் வெளியேறும் பகுதியை உடைத்து யாரோ சேதப்படுத்திய காரணத்தால் தண்ணீர்வேகமாகஉட்புகுந்து அது மூழ்கியது என்றும் சொல்லப்படுகின்றது.

மணியளவில் இனம் தெரியாத சிலர் படகில் இருந்து நீர் படகு மூழ்கியதற்கு நாச வேலைகள் காரணமா என்று பொலிஸார்விசாரணைநடத்தி வருகின்றனர்.

இதேநேரம் இப் படகினைப் பெற்றுக்கொண்ட முல்லைத்தீவுமீனவர்சம்மேளனத் தலைவர் நாதனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, படகு மூழ்கிய தகவலை உறுதி செய்ததார். பல மணிநேரம் தாமும் கடற்கடையினரும் போராடியும் படகை மீட்க முடியவில்லை எனத் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622

10kg & 11kg க்கு மேல்
சாதார சேவை (2-3 கிழமை)
லண்டன் UK 1200/-
பிரான்ஸ் France 2100/=
ஜேர்மனி Germany 1950/=
சுவிஸ் Swiss 2300/=
விரைவு (Express) (3-6 நாட்கள்)
கனடா Canada 2950/=
நோர்வே Norway 2950/=
அவுஸ்ரேலியா Australia 2450/=
அமெரிக்கா USA 2750/=
அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
யாழ்ப்பாணம் நல்லூர் ஆவரங்கால் கைதடி கிளிநொச்சி வவுனியா திருகோணமலை கொழும்பு
070 330 5500 075 330 5500 076 235 4367

# பெண்கள் சக்தியினால் விரட்டப்பட்ட கோட்டா!




ஹிருணிக்கா பெருமிதம்

கொழும்பு, மார்ச் 20

ஜனாதிபதிபதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷவை பெண்கள் சக்தியே வெளியேற்றியது என்று ஐக்கிய மக் கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும், அந்தக்கட்சியின் பெண்கள் அமைப்பின் முக்கியஸ்தருமான ஹிருணிக்கா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள்அமைப்புமுக்கியஇடத்தை வகித்தது என்று தலவாக்கலை பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், ஐக்கியதேசியக் கட்சிக்கும் தற்போதைய சூழ்நிலையில் தேர்தலுக்கு முகங்கொடுக்க முடியாது. ஏனெனில் தோல்வி உறுதியாகியுள்ளது. அதனால்தான் தேர்தலைப் பிற்போடும் முயற்சியில் ஆளுங்கட்சி இறங்கியுள்ளது.

தேர்தல் இல்லைஎன்பதற்காக நாம் ஓர் அடியேனும் பின்வாங்கிவிடக்கூடாது. அவ்வாறு நடந்தால் ஏனைய கட்சிகள் இரு அடி முன்நோக்கி நகரக்கூடும். எமதுபிரசாரத்தை தொடர வேண்டும். நாளொன்றுக்கு 5 புதிய வாக்காளர்களையாவது நாம் எம்பக்கம் இழுக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க எந்த நேரத்தில் எந்த முடிவை எடுப்பார் என்றும் தெரியாது. சிலவேளை அவசர தேர்தலொன்றுக்குச் செல்லலாம். தேர்தல் இல்லையென நாம் ஒதுங்கியிருந்தால் அவ் வேளையில் எமக்கு சிக்கல் ஏற்படும். எனவேதான் தயார் நிலையில் இருக்குமாறு கோருகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்கவை தமிழ், முஸ்லிம் மக்களும் நம்பினர். ஆனால், ராஜபக்ஷக்களை காப்பாற்றப்போய் அவர் அந்த நம்பிக்கையை இழந்துவிட்டார். தற்போது மக்கள் மனம் வென்ற ஒரே தலைவர் சஜித் பிரேமதாஸதான். அவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லை.

வாங்கும் சம்பளத்தை மக்களுக்கே வழங்கிவருகின்றார். கோட்டாபயராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அமைப்பு உள்ளிட்ட பெண்களே விரட்டினர். ரணில் மற்றும் ராஜபக்ஷவை விரட்டுவதற்கான நடவடிக்கையை நாம் முன்னெடுப்போம்.

அதுமட்டுமல்ல சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி கதிரையில்பெண்கள்சக்தியே அமரவைக்கும்என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன். – என்றார்.

# அதிக அளவில் காணிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் மாவட்டமே கிளிநொச்சி



மாவட்டச் செயலர் தெரிவிப்பு

அதிக அளவில் காணிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் ஒரு மாவட்டமாகக் கிளிநொச்சி மாவட்டம் காணப்படுவதாகக்கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற அரச காணிகள் தொடர்பான இலவச சட்ட உதவ நடமாடும் சேவையில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது –

கிளிநொச்சிமாவட்டத்தில் இடப்பெயர்வுகள் மற்றும் மீள்குடியமர்வின் பின்னரான செயற்பாடுகளில் அதிக அளவில் காணிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் ஒரு மாவட்டமாகக் கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது.

இவ்விதமானபிரச்சினை மக்களிடையே பாரிய ஒரு பிரச்சினையாகவும் மாறியுள்ளது. பல்வேறு வேலைத் திட்டங்களின் ஊடாக மக்களின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கியுள்ள போதும் இன்னும் பல பிரச்சினைகள்தீர்க்க முடியாதநிலையில் காணப்படுகின்றன.

அதிலும் சட்ட ஏற்பாடுகள் சட்டம் சார்ந்த இருக்கக்கூடிய பிரச்சினைகளால் மக்கள் திருப்தியடையக்கூடிய பதில்களை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்விதமானபிரச்சினைகளுக்கு சட்ட உதவிகளைப் பெற வேண்டிய தேவை மக்களுக்கு உள்ளது. இவ்வாறானவர்களுக்கு இது போன்ற சட்ட உதவிகளை வழங்குவது மிகவும் உதவியாக இருக்கும் என்றும்அவர்மேலும்தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டக்கல்லூரி மாணவர்கள் மற்றும் இந்து மாகாணசபை ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சட்டக் கல்லூரி மாணவர்களால் அரச அதிபருக்கான நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில்கரைச்சிபிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் பாரதி, சட்ட வரைஞர் திணைக்களத்தின் பிரதி சட்டவரைஞர் செல்வகுணபாலன், இந்து மகாசபையின் சட்ட மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டு மக்கள் மத்தியில் பிளவுகளை அரசியல்வாதிகளே ஏற்படுத்துகின்றனர்

மல்வத்து மகா நாயக்கர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 20

ஒரு சில அரசியல்வாதிகளே சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதாக மல்வத்துமகாநாயக்கதேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

இஸ்லாமியநாடுகளின் கூட்டமைப்பைச்சேர்ந்தமுஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் கண்டியில் மல்வத்து மகாநாயக்க தேரர் திப்படுவாவே சுமங்கல தேரரைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இதன்போது அரபு மற்றும் முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு வழங்கும் உதவிகள் தொடர்பாக மகாநாயக்க தேரர் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீண்ட காலமாக சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் நல்லுறவுடன் இருக்கின்றனர் எனவும், ரிதீகம மற்றும் கண்டி முஸ்லிம் பள்ளிவாசல்கள் பௌத்த விகாரைகளின் காணிகளிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன எனவும் மல்வத்து மகாநாயக்க தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த வகையில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒருசில அரசியல்வாதிகளே பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கந்தப்பளை – சந்திரகாந்தி தேயிலை ஆலையில் தீ

கந்தப்பளைபொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பார்க் தோட்ட பிரிவுக்குரிய சந்திரகாந்தி (எஸ்கடேல்) தோட்ட மூன்று மாடிதேயிலைதொழிற்சாலை சனிக்கிழமைஅதிகாலை1.30 மணி அளவில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

கந்தப்பளை சந்திரகாந்தி (எஸ்கடேல்) தோட்ட தேயிலை தொழிற்சாலை இத் தோட்டத்தின் பழைமைவாய்ந்த தேயிலை தொழிற்சாலையாகும்.

இந்தத்தேயிலைதொழிற்சாலையை பார்க் தோட்ட அதிகாரிகையேற்று அங்கு கழிவு தேயிலை அரைத்து பொதி செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




தீ பிடிப்பு சம்பவம் இடம்பெற்ற வேளையில் தொழிற்சாலை பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கவில்லை. இதனால் உயிர் ஆபத்துக்கள் எதுவும் இடம் பெறவில்லை.

திடீரென ஏற்பட்ட இந்த தீ விபத்தில் எரிந்த தொழிற்சாலையின் தீயைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர தோட்ட மக்கள்,கந்தப்பளை பொலிஸார் மற்றும் நுவரெலியா மாநகரசபை தீயணைப்பு படையினர் கடும் முயற்சிகளை எடுத்தும் தொழிற்சாலை முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது.

தீ சம்பவத்திற்குறிய காரணம் இதுவரை கண்டு பிடிக்கவில்லை சம்பவம் தொடர்பாக விசாரணைகளை கந்தப்பளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கேட்டுக் கேட்டு புளித்துப்போன கதைகளால் ஏமாற்றப்படும் மக்கள்

**பொருளாதார நெருக்கடியின் பாதிப்பிலிருந்து நாடு இயல்பு நிலைக்குத் திரும்ப இன்னும் 4 வருடங்களாவது ஆகும் என்று எதிர்வுகூறியிருக்கிறார் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அதுமட்டுமல்ல எதிர்வரும் இரண்டு வருடங்களில் வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாட்டை அனைவரும் காண முடியும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.**

**2048 ஆம் ஆண்டளவில் இலங்கையை வெற்றிகரமான நாடாக மாற்றுவதற்கான 25 வருட திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய இளைஞர்களின் அர்ப்பணிப்புடன் மட்டுமே அதனை அடைய முடியும் எனவும் அரச தலைவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.**

**இவையெல்லாம் கேட்பதற்கு நன்றாக இருக்கின்றபோதும் வரலாறு முழுவதும் இதுபோன்ற கதைகளாலேயே இலங்கை மக்கள் ஏமாற்றப்பட்டு இன்று முழுக் கடனாளிகளாக, கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது முறிந்துபோன ஒரு நாட்டின் குடிமக்களாக அவமானப்பட்டு நிற்கிறார்கள். கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன இத்தகைய கதைகளால் ஒவ்வொரு முறை ஆட்சிக்கு வந்த கட்சிகள் நாட்டை தோல்வியடைய வைத்தமைதான் நடந்திருக்கிறது.**

**வரும்போதும் ஒவ்வொரு கட்சியும் இதுபோன்ற அபிவிருத்திக் கதைகளையும் கொள்கைகளையும் அறிவிக்கின்றன. பொருளாதாரத்தில் மட்டும் என்றில்லை, கல்வியில், சுகாதாரத்தில், விவசாயத்தில் என்று எல்லாவற்றிலும் இதுபோன்ற பசப்பு வார்த்தைகளும் கொள்கைகளும் வாரி இறைக்கப்படுகின்றன. அவற்றை நம்பிக்கொண்டும், விடிவு ஏற்பட்டுவிடாதா என்கிற ஏக்கத்துடனும் மக்களும் ஒவ்வொரு தடவையும் வாக்களித்து வாக்களித்து ஏமாந்து போய் விடுகின்றார்கள்.**

**கடைசியில் அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் முற்றிலும் தோல்வியடைந்த ஒரு நாட்டை மட்டுமே கடந்த 75 ஆண்டுகளில் இந்த அரசியல்வாதிகளால் உருவாக்க முடிந்திருக்கிறது. இப்போது மீதி இருக்கும் 25 ஆண்டுகளில் நாட்டை துரிதமாக அபிவிருத்தி செய்யப்போகிறோம், சிங்கப்பூராக்கப் போகிறோம் என்கிற கதைகளை ரணில் தொடங்கியுள்ளார்.**

**இன்னும் இரண்டு வருடங்களுக்கு அவர் பதவியில் நீடிப்பாரா என்பதே கேள்விக்குரியது. தேர்தலில் மக்களைச் சந்திக்கும் துணிபு இல்லாமல்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தள்ளி வைத்துக் கொண்டு செல்கிறார். இன்னும் இரண்டு வருடங்களில் அவரால் மாயாஜாலங்களை நிகழ்த்த முடியப் போவதில்லை. அப்படி முடிந்தால் ரூபாயின் மதிப்பு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி நாடு இயல்புக்குத் திரும்ப 4 ஆண்டுகள் எடுக்கும் ஏன்று அவரே சொல்லத் தேவையில்லை. அப்படிப்பட்ட நிலையில் இன்னும் இரண்டு வருடங்களில் மக்களைச் சந்தித்தாலும்கூட ரணிலால் சரிவிலிருந்து மீண்டு மீண்டும் ஆட்சியைப் பிடிக்கமுடியும் என்று நம்புவதற்கு இடமில்லை.**

**இத்தகையதொரு நிலையில் அவர் அறிவிக்கும் அல்லது செயற்படுத்தும் 25 வருட கொள்கைத் திட்டத்தை யார் செயற்படுத்தப்போகிறார்கள்? நாடு எப்படி அபிவிருத்தி அடையப் போகிறது? அல்லது அடுத்த 25 வருடங்களுக்கும் தேர்தல்களே இல்லாமல் பதவியில் நீடிக்கும் திட்டத்தைக் கொண்டிருக்கிறாரா ரணில்?**

# போலியான விமர்சனங்களுக்கு இடமில்லை மக்கள் என் பக்கம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் இறுமாப்பு



'ஊழல் ஒழிப்பு... ஊழல் ஒழிப்பு...' என உறங்கும் வேளையிலும் கோஷங்கள் எழுப்பிக்கொண்டிருக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், தமது கட்சியால் வழங்கப்பட்டுவரும் பஸ்களுக்கான உதவித்திட்ட வழிமுறைகள் தொடர்பில் தெளிவுப்படுத்த வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமானஜீவன்தொண்டமான் ஊடக அறிக்கையினூடாக வலியுறுத்தியுள்ளார்.

அவர்அதில்மேலும்குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

பஸ்கள் வழங்க எவ்வாறு நிதி கிடைக்கின்றது? அந்த வழிமுறையை சொன்னால் சிறப்பாக இருக்குமென நாடாளுமன்றத்தில் கூறிய கருத்தால் சிலருக்கு தொடை நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அதனால் தான் கைக்கூலிகள் மூலம் கட்டுக்கதைகள் பரப்பப்பட்டு வருகின்றன. இப்படியானவர்களின் விமர்சனங்கள் மக்கள் மத்தியில் எடுபடாது. மக்கள் அவற்றை நம்பப்போவதுமில்லை. ஏனெனில், மக்கள் என் பக்கம் உள்ளார்கள்.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் எல்லா வேலைத்திட்டங்களையும் எதிர்த்தால் தான் அது எதிர்க்கட்சிஎனநினைத்துக்கொண்டு பிரதான எதிர்க்கட்சி செயற்படுகின்றது. அதுமட்டுமல்ல, அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டங்களை குழப்பும்நோக்கில் 'ஊழல்' முத்திரை குத்தப்பட்டுவருகின்றது.

தேர்தல் காலம் வந்தால் போதும், அலசி ஆராயாமல் கூட எடுத்த எடுப்பிலேயே ஊழல், ஊழல் என கோஷம் எழுப்புகின்றனர்.

ஆனால், தாங்கள் எதை யாவது செய்துவிட்டால் அது சேவை என்ற போர்வையில் பிரசாரமும் முன்னெடுக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சியால் பாடசாலைகளுக்கு பஸ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு பஸ்ஸின் விலை 50 லட்சம் ரூபா என கூறப்படுகின்றது.

இதுவரை 47 பஸ்கள் வழங்கப்பட்டுள்ளதாம். அப்படியானால் 235 மில்லியன் ரூபா எங்கிருந்து வந்தது? மரத்தில் இருந்து பறித்தார்களா? வந்த வழியைத்தான் கேட்டேன். ஏனெனில், அவர்கள் வெளிப்படைத் தன்மை பற்றி கதைப்பவர்கள். எனவே தான் பஸ் விடயத்திலும் வெளிப்படைத் தன்மையை வலியுறுத்தியுள்ளேன்.

'ஊழல் ஒழிப்பு... ஊழல் ஒழிப்பு...' என உறங்கும் வேளையிலும் கோஷங்கள் எழுப்பிக்கொண்டிருக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், தமது கட்சியால் வழங்கப்பட்டுவரும் பஸ்களுக்கான உதவித்திட்ட வழிமுறைகள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும்என்றுஇ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

# எல்லை நிர்ணய செயன்முறை மீண்டும் திருத்தப்படவேண்டும்

## கூறுகிறார் வஜிர அபேவர்தன



கொழும்பு, மார்ச் 20

எல்லைநிர்ணயசெயன்முறை மீண்டும் திருத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

சனத்தொகை மற்றும் புவியியல் இருப்பிடத்துக்கு ஏற்ப இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களின் எல்லை நிர்ணய நடவடிக்கைபாரிய அநீதியை இழைத்துள்ளதாக மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இவ்வருடம் 20 லட்சம் கனமீற்றர் கடல் மணல் அகழ நடவடிக்கை

## பாதிக்கப்படும் மீனவருக்கு ரூ. 20 கோடி இழப்பீடு

இந்த வருடம் 20 லட்சம் கன மீற்றர் கடல் மணலை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கமைய, இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். முறையாக கழுவப்பட்டு, தேவையான தரத்தில் தயாரிக்கப்பட்டகடல்மணலின் கனசதுரத்தை பொதுமக்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்யுமாறு இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நிலையில் முத்துராஜவெல கடற்கரையிலிருந்து நீர்கொழும்பு கடற்கரை வரையிலான 10 – 15 கிலோமீற்றர் தூரத்தில் கடலில் இருந்து நிலத்துக்கு கடல் மணல் அள்ளப்படும்.

இந்த கடல் மணல் அகழ்வுத் திட்டத்தால் கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரையான கடற்பரப்பில் வாழும் மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள் என அடையாளம்காணப்பட்டுள்ளது.

அவ்வாறு பாதிக்கப்படும் மீனவ சமூகத்தின் முன்னேற்றத்துக்காக அந்த மீனவ பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளதிணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்யுமாறு பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கு முன்னதாக, இது தொடர்பில் அரசியல் அதிகாரிகள், பிரதேசத்தின் மதத் தலைவர்கள் மற்றும் மீனவ சங்கங்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். மீனவ சமூகத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 20 கோடி ரூபாவை வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை அத்தியாவசிய தேவையுடைய மக்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் அமைச்சர் கடுமையாக வலியுறுத்தியுள்ளார்.

கடலில் இருந்து குழாய்கள் மூலம் ஏற்றப்படும் மணலை சம்பந்தப்பட்ட இடத்துக்குக் கொண்டுசென்று, திறந்த வெளியில் மணல் திட்டுகளாகச் சேமித்து, மணலை இயந்திரத்தில் செலுத்தி, அவற்றை கழுவி, சுத்தம் செய்து, தெரிவு செய்து உலர்த்துதல் என பல பிரிவுகளாக பணிகள் நடைபெறுகின்றன.

இவ்வாறு கழுவி சுத்தம் செய்து உலர்த்தப்படும் உப்பு இல்லாத கடல் மணலை பொறியியலாளர்களின் மேற்பார்வையில் தேவையான தரத்தில் தயாரிக்கின்றனர்.

அதன்பின்னர் கெரவலப்பிட்டிய – முத்துராஜவெல மணல் விற்பனை நிலையத்தில் கடல் மணல் விற்பனை செய்யப்படும்.

கடல் மணலைப் பெறுவதற்கு முன்னர் கரையோரப் பாதுகாப்பு அதிகார சபை, நாரா நிறுவனம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற நிறுவனங்களிடமிருந்து சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தியுள்ளார்.

# அனுதாபம் ஊடான பெண்களின் அரசியல் நுழைவு மாறவேண்டும்

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவிப்பு



இலங்கையைப்பொருத்தவரை பெரும்பாலான பெண்கள் கணவன் அல்லது தந்தையின் மறைவுக்குப் பின்னரான அனுதாபங்கள் மூலமே அரசியல் அதிகாரங்களுக்கு வந்துள்ளனர். அந்த நிலைமை மாற்றப்படவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக்கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற சமத்துவக் கட்சியின் சர்வதேச பெண்கள் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பாலான பெண்கள் கணவன் அல்லது தந்தையின் மறைவுக்குப் பின்னரான அனுதாபங்கள் மூலமே அரசியல் அதிகாரங்களுக்கு வந்துள்ளனர். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். பெண்களின் அரசியல் அதிகாரங்களுக்கு ஆளுமையின் ஊடாக பிரவேசிக்க வேண்டும்.

உலகில் முதல் பெண் பிரதமரை உருவாக்கிய நாடு என நாம் பெருமைப்பட்டுக் கொள்கின்றோமே தவிர அரசியில் பெண்களுக்கு போதுமான வாய்ப்புக்களை வழங்குவதற்கு இந்த நாடு இன்னமும் தயாராக இல்லை. ஒரு சில இஸ்ஸாமிய நாடுகளில் அரசியலில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்புக்கள் போன்று கூட இலங்கையில் வழங்கப்படவில்லை என்பது கவலைக்குரியது.

இலங்கையின் வாக்காளர்களில் அதிகளவில் பெண் வாக்காளர்கள் உள்ள போது இந்த வாய்ப்பு மறுப்பு என்பது தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. எங்களுடைய சமத்துவக் கட்சியைப் பொறுத்த வரைப் பெண்களுக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்த கட்சியாகக் காணப்படுகின்றோம்.

உள்ளூராட்சி மன்றங்களில் கூட அதிகளவில் எங்களுடைய கட்சி பெண்களே உறுப்பினர்களாக உள்ளனர். நாம் கட்சியின் பெயரில் மாத் திரம் சமத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை செயற்பாடுகளிலும் அதனை நிரூபித்துள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சமத்துவக்கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் ஜாக்குவின் லூசியா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மத குருமார்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நீதியரசர் குழாமை நாடாளுமன்றக்குழு விசாரிப்பது நாட்டின் நீதித்துறையை மேலும் பராதீனப்படுத்தும்!

## சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 20

உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக் காலத்தடையுத்தரவுக்கு மதிப்பளிக்க மறுப்பதும், அதனை நாடாளுமன்றக்குழுவில் விசாரணைக்கு உட்படுத்துவதும் ஏற்கனவே நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை ஆபத்தான நிலையிலுள்ள இலங்கைக்கு மிகமோசமானதொரு முன்மாதிரியாகவே அமையும் என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

அதுமாத்திரமன்றி உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களை நடத்துவதற்கான நிதி வழங்கப்படுவதை உறுதிசெய்யும்வகையில் உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுக்கு மதிப்பளிக்குமாறு அந்த ஆணைக்குழு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப் பட்டிருப்பவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களுக்கான நிதியை விடுவிக்காமல் இருக்கும் செயற்பாட்டைத் தடுக்கும் வகையில் சட்டமா அதிபர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோருக்கு எதிராக உயர்நீதிமன்ற நீதியரசர்களால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத்தடையுத்தரவு தொடர்பாக நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குழுவில் ஆராயவேண்டுமெனக் கடந்த 7 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்தவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சபாநாயகர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளின்மீதான அநாவசியமானதும், பாரதூரமானதுமான அத்துமீறல் என்றே நாம் கருதுகின்றோம்.

நீதிமன்றம், அதன் சொந்த அதிகார வரம்பு மற்றும் திறன்கள் என்பன உள்ளடங்கலாகநியாயத்துவஇயல்பைக்கொண்ட அனைத்து விவகாரங்கள் தொடர்பிலும் கேள்வியெழுப்பும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது என்பதே சட்ட ஆட்சியின் அடிப்படைக் கோட்பாடாகும். எனவே, உயர்நீதிமன்றம் அதன் அதிகார வரம்பெல்லைக்குள் செயற்பட்டிருக்கின்றனவா என்பதை எந்தவொரு அரசியல்சார் தரப்புக்களாலும் தீர்மானிக்க முடியாது.

அதேவேளை உயர்நீதிமன்றத்தின் இடைக் காலத் தடையுத்தரவு தொடர்பாக நாடாளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பான குழு அதன் விசாரணைகளை முடிவுறுத்தும்வரை தேர்தலுடன் தொடர்புடைய எந்தவொரு செயற்பாடுகளையும் முன்னெடுக்கவேண்டாமென சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்டமைப்புக்களிடமும் வலியுறுத்துமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்க கடந்த 10 ஆம் திகதி பிரதி சபாநாயகரிடம் கோரிக்கைவிடுத்திருக்கின்றமை தொடர்பாக எமது தீவிர கரிசனையை வெளிப்படுத்துகின்றோம். அதேவேளை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவு எவ்வித இடையூறுமின்றி உரியவாறு நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம்.

உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுக்குமதிப்பளிக்க மறுப்பதும், அதனை நாடாளுமன்றக்குழுவில் விசாரணைக்கு உட்படுத்துவதும் 'அதிகார வேறாகத்தை' மீறுவதாக அமையும் அதேவேளை, ஏற்கனவே நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை ஆபத்தான நிலையிலுள்ள நாட்டுக்கு மிகமோசமான முன்மாதிரியாகவும் அமைந்துவிடும்.

எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கான நிதி வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத்தடையுத்தரவுக்கு மதிப்பளிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அத்தோடு உயர்நீதிமன்ற நீதிபதிகளை நாடாளுமன்றசிறப்புரிமைதொடர்பான குழுவில்விசாரணைக்கு உட்படுத்துவதற்குத் தெரிவித்த இணக்கத்தை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு சபாநாயகரிடம் கோருகின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலைப் பிற்போட்டால் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் முரண்பாடு தோன்றும்

## மஹிந்த தேசப்பிரிய எடுத்துரைப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி இடம்பெறுவதற்கான சாத்தியம் அரிதாகவே உள்ளது. பொது இணக்கப்பாட்டுடன் தேர்தலை மூன்று அல்லது நான்கு மாத காலத்துக்குள் நடத்த வேண்டும்.

தேர்தலை நடத்தாவிட்டால்எல்லைநிர்ணயஅறிக்கை தொடர்பில் முரண்பாடு தோற்றம்பெறும்எனதேசியதேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரியதெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அரச அச்சுத்திணைக்களம் ஆகிய தரப்பினரது கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறுவது சாத்தியமற்றதாக உள்ளது.

340 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நிறைவடைந்துள்ளது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அரச அதிகாரிகளால் உள்ளூராட்சி மன்றம் நிர்வகிக்கப்படுவது ஜனநாயகத்துக்கு முரணானது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு பல நெருக்கடிகள் தோற்றம் பெற்றுள்ளன.

தேர்தல் தொடர்பில் சகல தரப்பினரும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்து ஒரு தீர்மானத்தை எடுத்து தேர்தலை வெகுவிரைவாக நடத்த வேண்டும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே மேலதிகமாக ஒரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் மன்றங்களின் பதவிக் காலத்தை மேலும் நீட்டித்தால், அது பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்தும்.

ஆகவே, ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து தேர்தலை வெகுவிரைவில் நடத்த வேண்டும்.

ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி தேர்தலை நடத்த வேண்டும். உள்ளூராட்சிமன்றத்தேர்தலைநடத்தாவிட்டால் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

தேர்தல் இல்லாமல் அறிக்கை சமர்ப்பித்தால் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் நாடாளுமன்றம் ஒரு தீர்மானத்தை எடுக்க நேரிடும். அந்தத் தீர்மானம் எத்தன்மையில் அமையும் என்பதை எதிர்பார்க்க முடியாது. – என்றார்.

# லிஸ்டீரியோசிஸ் பரவுவது தொடர்பாக ஆய்வுசெய்க

## சன்ன ஜயசுமண கோரிக்கை

லிஸ்டீரியோசிஸ் நோய் பரவுவதற்கான மூல காரணத்தைக் கண்டறிய உடனடியாக ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.



அநுராதபுரத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் –

அரசாங்கத்தின் திறமையின்மையே நோய் பரவுவதற்கு காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் லிஸ்டீரியோசிஸ் நோயால் கண்டறியப்பட்ட ஒரு நோயாளி மருத்துவ கவனிப்பில் இருந்தபோது வைத்தியசாலையில் காலமானார்.

இதன் காரணமாக லிஸ்டீரியா மோனோசைட்டோஜென்ஸ் என்ற பாக்டீரியாவால் அசுத்தமான உணவை உட்கொள்வதால் ஏற்படும் நோய் பரவுவது பற்றிய கவலைகள் எழுந்துள்ளன.

பொது சுகாதார பரிசோதகர்கள் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் பாதுகாப்பான உணவுப் பழக்கங்களைப் பின்பற்றுமாறும் வலியுறுத்தியுள்ளனர். என்றார்.

# நீதிமன்றத்தோடு விளையாடுவதற்கு ஜனாதிபதிக்கு இடமளிக்க முடியாது

## சாலிய பீரிஸ் காட்டம்

நீதிமன்ற தீர்ப்புக்கு நிறைவேற்று அதிகாரி கீழ்ப்படாவிட்டால், சாதாரண மக்கள் கீழ்ப்படிவார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

அதனால் நீதிமன்றத்துடன் விளையாடுவதற்கு நிறைவேற்று ஜனாதிபதிக்கு எங்களால் இடமளிக்க முடியாது. அதற்கு எதிராக சட்டத்துறைசார்ந்தவர்களாகி, நாங்கள் அதற்கு எதிராக ஒரு சமூகமாக இருந்து குரல் கொடுக்க வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மாத்தறை சட்டத்தரணிகள் சங்கம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

சட்டத்தின் ஆதிக்கத்துக்கு எதிராக பாரிய பிரச்சினைகள் தோன்றி வருகின்றன. இதில் நீதிமன்ற சுயாதீனத் தன்மைக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் தடைகள், நாங்கள் காணும் பிரதான அச்சுறுத்தலாகும்.

நீதிமன்றத்தால் விடுக்கப்பட்டிருக்கும் சில கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல், நீதிபதிகளை அழுத்தங்களுக்கு உட்படுத்த நிறைவேற்றுத்துறை முயற்சிக்கிறது.

துறைசார் தொழில் வல்லுநர்கள் என்ற அடிப்படையில் அதற்கு நாங்கள் எதிராகச் செயற்பட வேண்டும். நீதிமன்ற சுயாதீனத் தன்மை தொடர்பில் நிறைவேற்றுத்துறை தலையிடுவதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது.

நீதிபதிகள் தீர்ப்பு வழங்கும் போது அது தொடர்பில் வேறு முறைமைகளைக் கையாண்டு நீதிபதிகளை நோவினைப்படுத்தல்களுக்கு இடமளிக்க முடியாது.

நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு நிறைவேற்றுத்துறை கீழ்ப்படியாவிட்டால், சாதாரண மக்கள் நீதிமன்றத் தீர்ப்புக்களுக்கு கீழ்ப்படிவார்கள் என எவ்வாறு நாம் எதிர்பார்க்க முடியும்?

அதனால், இது நிறைவேற்றுத்துறையால் மேற்கொள்ளப்படும் மிகவும் மோசமான முன்மாதிரியாகும்.

அதனால், நீதித்துறை சார்ந்தவர்கள் என்ற வகையில் நிறைவேற்றுத்துறையின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து குரல்கொடுக்க வேண்டும். எதிர்வரும் ஒரு மாத காலத்துக்குள் அது தொடர்பில் தீர்மானிக்க வேண்டும்.

நீதிமன்ற நடவடிக்கையில் தலையிட வேண்டாம் என இது தொடர்பாக நிறைவேற்று அதிகாரிக்கு கடந்த வாரம் அறிவித்திருக்கிறோம். ஏனெனில், வரலாற்றில் எப்போதும் நிறைவேற்றுத்துறை முறைகேடாக நீதிமன்ற நடவடிக்கையில் தலையிடும் போது சட்டத்தரணிகள் சமூகம் அதற்கு எதிராக உறுதியாக செயற்பட்டிருக்கிறது.

அதனால் நீதிமன்றத்துடன் விளையாடுவதற்கு நிறைவேற்று ஜனாதிபதிக்கு எங்களால் இடமளிக்க முடியாது.

சட்டத்துறை சார்ந்தவர்களாகி, நாங்கள் அதற்கு எதிராக ஒரு சமூகமாக இருந்து குரல் கொடுக்க வேண்டும்.

70, 80 காலப்பகுதிகளில் நீதிமன்றங்களுக்கு எவ்வாறான தடைகள் ஏற்பட்டன என்பதை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அதனால் இதற்கு இடமளிக்கப்போவதில்லை என நாங்கள் உறுதிபூணுவோம். – என்றார்.



# தேர்தலைத் தொடர்ந்து ஒத்திப்போட்டால் நாட்டின் நிலைமை மேலும் மோசமடையும்

## அரசுக்குச் சஜித் அணி எச்சரிக்கை

தேர்தலை ஒத்திப்போட ஒத்திப்போடநாட்டின்நிலைமை இன்னும் மோசமடையும்.

– இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் ஐக்கிய மக்கள் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு பயங்கரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சாப்பாடு இல்லாததால் நாள் பூராகவும் உறங்கும் மக்கள் மலையகத்தில் உள்ளார்கள் என்று செய்தி வெளியாகியுள்ளது.

இந்த நாட்டை இப்படியான நிலையில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

அரசியல்ஸ்தீரத்தன்மை இல்லாவிட்டால் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியாது. அதனால்தான் சர்வதேச நாணயத்தின் நிதி கிடைப்பது தாமதமாகின்றது.

இலங்கையில் பல வருடங்களாக பல நிறுவனங்கள் இலங்கையை விட்டுப் போவதற்கு முடிவெடுத்துள்ளன. தேர்தலை ஒத்திப்போட ஒத்திப்போட இந்த நிலைமை இன்னும் மோசமாகும்.

தேர்தலை நடத்தி மக்கள் அவர்கள் விரும்பும் ஆட்சியை நிறுவுவதற்கு இடம் கொடுக்க வேண்டும். தேர்தலை ஒத்திப்போட முடியாது. அதனால் அரசு உள்ளூராட்சி தேர்தல் சட்டத்துக்குத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கின்றது.



உள்ளூராட்சி சபைத் தேர்தலை நாங்களே வெற்றி கொள்வோம். அதனைத் தொடர்ந்துவருகின்றஅனைத்துத் தேர்தல்களிலும் நாம் வெற்றிபெறுவோம் – என்றார்.

# சிறுமியை தனியே அழைத்துசென்ற இளைஞன் கைது

யாழ்ப்பாணத்தில் 14 வயது சிறுமியைப் பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து தனியே அழைத்துச் சென்ற இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கை கடந்த சனிக்கிழமை தெல்லிப்பழை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் – மல்லாகம் பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமியை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட இளைஞன் புதுக்குடியிருப்புபகுதியைச்சேர்ந்த 20 வயதுடைய நபர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

பாடசாலைக்குச் செல்ல முற்பட்டபோது குறித்த இளைஞன், சிறுமியை அழைத்துக் கொண்டு புதுக்குடியிருப்பு பகுதிக்குச் சென்றுள்ளார்.

இந்தசம்பவம்தொடர்பில் சிறுமியின் பெற்றோர் தெல்லிப்பழைபொலிஸில்முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து, தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் உதய பாலா தலைமையில் புதுக்குடியிருப்பு பகுதிக்குச் சென்ற பொலிஸ் குழுவினர், சிறுமியை மீட்டுள்ளதுடன் இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

இருவரையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தி மருத்துவபரிசோதனைக்குப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

# திரவ முட்டை இறக்குமதிக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டது

திரவ முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு வரிச்சலுகையும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் முட்டைத் தட்டுப்பாட்டுக்கு மாற்றுத்தீர்வாக திரவ முட்டை இறக்குமதிக்கு வரிச்சலுகையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ –

இதன்படி, திரவ முட்டை இறக்குமதிக்கு கிலோகிராம் ஒன்றிற்கு 1,300 ரூபாவாக இருந்த வரி 200 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இன்னும் 3 நாள்களுக்குள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முதல் தொகுதி முட்டைகளை இலங்கையை வந்தடையும் என மேலும் தெரிவித்துள்ளார்.

# நுரைச்சோலை அனல் மின் நிலைய இயந்திர கட்டமைப்பில் கோளாறாம்

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாம் மின் உற்பத்தி இயந்திர கட்டமைப்பில் ஏப்ரல் மாதத்தில் பெரும்பழுதுபார்ப்புபணிகள் மேற்கொள்ளப்படவிருந்த நிலையில், அது தற்போது செயலிழந்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இயந்திர கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தகவலை எரிசக்தி அமைச்சர் கபஞ்சன விஜேசேகர ருவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

தடையில்லா மின்சாரத்தை வழங்குவதற்காக, இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான டீசல் மற்றும் எரிபொருள் ஆகியவை மின் நிலையங்களில் பயன்படுத்தபடவுள்ளமையால் மின்வெட்டு இடம்பெறாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டொலர் நெருக்கடி வந்தது முடிவுக்கு

## நந்தலால் தகவல்

டொலர்நெருக்கடிமுடிவுக்கு வந்துவிட்டது என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

டொலர் நெருக்கடி முடிவுக்கு வந்துவிட்டது என தெரிவித்துள்ள நந்தலால் வீரசிங்க தேவையான துறைகளுக்கு செலவிடுவதற்கு போதுமான அளவு டொலர் எம் வசம் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இன்று(வெள்ளிக்கிழமை) சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அனுமதியளிக்கும் எனக் கருதப்படும் இலங்கைக்கான நிதி உதவி கிடைத்த பின்னர் முதலீட்டாளர்களின் ஆர்வம் அதிகரிக்கும் என தெரிவித்துள்ள மத்திய வங்கி ஆளுநர் இதன் காரணமாக மேலும் நிதியும் முதலீடும் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05


காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 05 ஞாயிற்றுக்கிழமை 19.03.2023 கதிர் 02

## நாட்டின் சில பகுதிகளில் சிறியளவில் நில அதிர்வு



இலங்கையின் சில பகுதிகளில் இன்று சிறியளவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை, கோமரன்கடவல மற்றும் கிரிந்த பிரதேசங்களில் சிறியளவில் நில அதிர்வுகள் உணரப்பட்டன என்று 2☞

## கடன் வெடிகுண்டையே உருவாக்குகிறார் ரணில்

### உதய கம்மன்பில சாடல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தினை மீட்டெடுக்கவில்லை. மாறாக ஒட்டுமொத்த நாட்டையும் சீரழிக்கும் பெரும் கடன் வெடிகுண்டையே உருவாக்கி வருகின்றார் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் மக்கள் சந்திப்புக் கூட்டமொன்று சனிக்கிழமை கண்டியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது பெருமளவில் கடன்களை வாங்கியதால்தான் ஏற்பட்டது.

இந்த நிலையில் தற்போது ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்டெடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தினை நாடியுள்ளேன் என்று தெரிவிக்கிறார்.

அவர் சர்வதேச நாணய நிதியத்திடமும் கடன்தான் பெற்றுக்கொள்ளகின்றார்.

நிதியம் 2.9பில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்குகின்றது.

ஆனால் மீளச் 2☞

### இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி எதிர்வுகூறல்

# ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு நவம்பரில் வெளியிடப்படும்

### ஏப்ரல் 25 உள்ளூராட்சித் தேர்தல் நடக்காது



உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஏப்ரல் 25 நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் அன்றைய தினம் தேர்தல் நடைபெறாது என்று சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார். அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தல் வரும் நவம்பர் மாதத்தில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். 2☞

## விடுவிக்கப்பட்ட படகை மீட்க தமிழக மீனவர்கள் மன்னார் வருகை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 19

மன்னாரில் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவரின் படகை எடுத்துச் செல்ல தமிழகத்தில் இருந்து மீனவர்கள் கடல் வழியாக மன்னார் வருகை தந்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய சமயம் கைது செய்யப்பட்டதான தமிழக மீனவர்களின் படகு ஒன்று விசாரணையின் பின்பு மன்னார் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டது. இவ்வாறு விடுவிக்கப்பட்ட படகை எடுத்துச் செல்லவே இன்று தமிழக மீனவர்கள் மன்னார் வருகை தந்தனர். 2☞

## வாகன விபத்தில் தந்தை, மகன் சாவு

வாகன விபத்தில் தந்தையும், மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சோக சம்பவம் சீதுவ - கொடுகொட வீதியில் பஞ்சானந்தா வித்தியாலயத்துக்கு அருகில் இன்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வான் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த 45 வயதுடைய தந்தையும், 14 வயது மகனும் உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் வானின் சாரதி பொலி-ஸாரால் கைது செய்-யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அடுத்து என்ன செய்வதென சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்கிறது உள்ளூராட்சி அமைச்சு

நாடளாவிய ரீதியில் உள்ள 29 மாநகர சபைகள், 36 நகரசபைகள், 275 பிரதேச சபைகள் ஆகியன உள்ளடங்கிய 341 உள்ளூராட்சி மன்றங்களின் ஆயட்காலம் இன்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வருகின்றது. இதனனால், அடுத்த கட்டமாக எந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சு கேட்டுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர இது தொடர்பில் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆயட்காலம் நள்ளிரவுடன் நிறைவுக்கு வரவுள்ள நிலையில் அவற்றின் அதிகாரங்கள் அதிகாரிகளிடத்தில் செல்லவுள்ளன.

எனினும், மக்கள் பிரதிநிதிகளினால் ஆற்றப்பட்ட சேவைகளை அதிகாரிகள் ஊடாக முன்னெடுப்பதில் பிரச்சினைகள் உள்ளன.

இது சம்பந்தாக ஏற்கனவே உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று காணப்படுகின்றது.

அந்தத் தீர்ப்பின் பிரதியை இணைத்து சட்ட மா அதிபரிடத்தில் ஆலோசனையைக் கோரியுள்ளோம்.

சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைத்ததும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். அதேநேரம், யார் எவ்விதமான கருத்துக்களை முன்வைத்தாலும், உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் சிறப்பான சேவைகளை ஆற்றியுள்ளனர்.

இது நாடாளவிய ரீதியில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் பொருந்தும் என்றார்.

## 340 சபைகளின் அதிகார காலம் இன்று நள்ளிரவுடன் நிறைவுக்கு

340 உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலம் இன்று நள்ளிரவுடன் நிறைவுபெறுகின்றது.

இதன்படி, அந்த நிறுவனங்களின் மாநகர மேயர்கள், நகர முதல்வர்கள், தவிசாளர்கள் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் ஆணையாளர் அல்லது செயலாளரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

அத்துடன், அந்த நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை இன்றைய தினம் வரை மாத்திரம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற் றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

## நாம் வீடு செல்வதற்குத் தயார் கொழும்பில் ரோசி தெரிவிப்பு



உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆயுட்காலம் இன்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வருகின்ற நிலையில் நாம் வீடு செல்வ தற் குத் தயாராக உள்ளோம் என்று கொழும்பு மாநாகர சபையின் முதல் வரான ரோசி சேனநாயக்க தனது இறுதி அறிவிப்பைச் செய்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முறையாக உள்ளூராட்சி மன்றங்களை கலைப்பதாக இருந்தால் மார்ச் 23 கலைக்கப்படுவதாக அறிவிக்கப் பட்டிருக்கவேண்டும். ஆனால் ஒருவருட ஆயட்காலம் நீட்டிக்கப்பட்டபோது அது நான்கு நாட்கள் சுருக்கப்பட்டுவிட்டது.

எவ்வாறாயினும் நாம் சட் டத்தின் பிரகாரம் வீடு செல்வதற்கு தயராகவே உள்ளோம். எனக்கு வழங்கப்பட்ட உத்தி யோக பூர்வ இல்லம் மற்றும் வாகனங்களை நாளைய தினம் உரியவாறு ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன -என்றார்.

## கோடிய கரையில் படகை காணோம்

(ந.லோகதயாளன்')

யாழ்ப்பாணம், மார்.19

தமிழகம் கோடியாக் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓர் இயந் திரப் படகினை காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனை திருடிக் கொண்டு யாராவது இலங்கைக்குத் தப்பிச் சென்றிருக் கலாம் என்று இந்திய கடலோர காவல் படை மற்றும் தமிழ்நாடு காவல்துறையினர் சந்தேகிக்கின்றனர். தமிழகத்தின் நாகப்பட்டிணம் மாவட்ட கோடியாக் கரையில் நிறுத்தி வைத்திருந்த படகே இவ்வாறு காணாமல் போனதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

காணமல்போன படகு மயிலாடுதுறை மாவட்டம் தரங்கங் பாடி பி.எஸ் காலணித் தெருவை சேர்ந்த முருகன் வேலு என்பவருக்கு சொந்த மான IND TN06 MO 2496 என்ற பைபர் படகு. வேலு கோடியக்கரையில் தங்கி மீன்பிடி தொழில் செய்து வருகின்றார் கடந்த நான்கு நாட்களாக கோடியக் கரை கடலில் நங்கூரம் இட்டு நிறுத்தப்பட்டிருந்த அவரது படகு இன்று காலை மாயமாகி இருந்தது. நங்கூரக் கயிறு அறுக்கப்பட்ட நிலையில் படகு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது என்று வேதாரண்யம் கடற்கரை காவல் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல்போன படகில் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## உயர் நீதிமன்றத்தின் கட்டளையை மீறியது தண்டனைக்குரிய குற்றம்

### நிதி அமைச்சின் செயலாளருக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் கடிதம்

(துன்வீன்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான நிதியை முடக்காது விடுவிக்குமாறு உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவினை பிறப்பித்துள்ள நிலையில் அந்நிதியை விடுவிக்காமையானது உயர்நீதிமன்றத்தினை அவமதிக்கும் செயலா கும் என்பதோடு, தண்ட னைக்குரிய குற்றமாகும்.

இவ்வாறு, சுட்டிக்காட்டி, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தனவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்து-வதற்காக 2023ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், உயர் நீதிமன்றம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குரிய நிதியை முடக்காது வழங்குமாறு இடைக்கால உத்தரவினைப் பிறப்பித்துள்ளது. இந்த நிலையில் தற்போது வரையில் அதற்கான நிதி வழங்கப்படவில்லை.

நீதிமன்றம் உத்தரவிட்டதன் பின்னரும் நிதி வழங்கப்படாமையானது உயர்நீதிமன்றத்தினை அவமதிக்கும் செயற்பாடாகும். அதுமட்டுமன்றி அரசமைப்பின் பிரிவு 105 க்கு அமைவாக தண்டனைக்குரிய குற்றமுமாகும்.

அந்த அடிப்படையில், உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக நிதி அமைச்சின் செயலாளரான தாங்கள் செயற்படாமை தொடர்பில் நாம் சட்ட நடவடிக்கைளை முன்னெடுக்கவுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி சபைகளின் காலத்தை நீடிக்க வேண்டும்

### மொட்டுக் கட்சி வலியுறுத்து

உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலத்தை மேலும் நீடிப்பதற்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஓர் ஏற்பாட்டை மேற்கொள்ள முடியும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டியுள்ளது. தேர்தலுக்குப் பணம் வழங்கக்கூடிய காலத்தை நிதி அமைச்சின் செயலாளர் அறிவித்தால் அதுவரை உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலத்தை நீடிக்க அமைச்சருக்கு சட்ட ஏற்பாடுகள் 2☞




### பாதாள உலகத் தலைவன் பூறு மூனா

## மறைத்து வைத்திருந்த வெடிபொருட்கள் மீட்பு

பாதாள உலகக்குழு உறுப் பினரான 'பூறு மூனா' என அழைக்கப்படும் ரவிந்து வர்ண ரங்கனவைத் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தியபோது, குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்துவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டன என்று பொலி-ஸார் தெரிவித்தனர்.

ஹன்வெல்ல பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 662 கிராம் அளவுடைய 'சி 4' என்ற வெடிபொருள் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் குறித்த சந்தேகநபரால் கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது எனக் கருதப்படும் துப்பாக்கி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன குறித்த பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன.

அதற்கு அருகிலுள்ள ஓர் இடத்திலிருந்து வெடி பொருட்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இந்தியக் கடலில் இலங்கை மீனவர் 6 பேர் இன்று கைது

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், மார்ச் 19

இந்தியாவின் தூத்துக்குடி கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் 6 இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படை சற்று முன்னர் கைது செய்தது.

இலங்கை மீனவர்கள் பயணம் செய்த படகும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள் தற்போது தூத்துக்குடி துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள இந்திய கடலோர பாதுகாப்பு படையின் காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## கடன் வெடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செலுத்தும்போது அது 4.4பில்லியன் டாலர்களாகிவிடும். அவ்விதமான நிலைமை ஏற்பட்டால் ஏற்கனவே உள்ள கடன்களுடன் இந்தக் கடனும் சேர்ந்து அது பெரும் வெடிகுண்டாகி விடும்.

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போதைய நிலைமையில் ஏப்ரல் 25 தேர்தல் நடைபெறாது என்றே தென்படுகின்றது. அதற்குப் பதிலாக ஏப்ரல் முதலாம் நாளைத் தேர்ந்தெடுத்திருந்தால் ஆணைகுழுவிற்கு அது மிகவும் முக்கியமான நாளாக அமைந்திருக்கும். (ஏப்ரல் 1 முட்டாள்கள் தினம் என்பதை மறைமுகமாகக் கோடி காட்டுகிறார் அமைச்சர்) அதேநேரம், எதிர்வரும் நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது. அந்த அறிவிப்புடன் தேர்தல் காலம் தொடங்கும்" என்றார்.

## விடுவிக்கப்ப.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்நாடு இராமேஸ்வரம் பகுதியைச் சேரந்த 445 இலக்கம் கொண்ட படகை 2022 டிசெம்பர் 18 அன்று மன்னார் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டது. எனினும் படகை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்புவதற்கான நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் காரணமாக அந்தப் படகு இப்போதே எடுத்துச் செல்லப்படுகின்றது.

இவ்வாறு வருகை தந்துள்ள தமிழக மீனவர் குழு மன்னாரில் நிற்கும் படகின் இயந்திரத்தை சீர் செய்து நாளை படகை எடுத்துச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நாட்டின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கப்பட்டுள்ளது. மெக்னிரியூட் அளவு கோளில் 3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டது என்று புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்தது.

இதேவேளை, கிரிந்த பிரதேசத்தில் உணரப்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 2.6 ஆகப் பதிவாகியுள்ளது என்று புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் மக்களுக்குப் பாதிப்பு ஏதும் இல்லை என்றும் அவர்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் அது தெரிவித்தது.

# வவுனியாவில் நேற்று ஒரே இரவில் 3 வீடுகளில் அடுத்தடுத்துக் கொள்ளை

வவுனியா கள்ளிக்குளம் கிராமத்தில் சனிக்கிழமை இரவு மூன்று வீடுகளில் அடுத்தடுத்து கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அதிகாலை மூன்று மணிவரையிலும் கொள்ளையர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இரவு 11மணியளவில் வயோதிபர் வசிக்கும் வீடு ஒன்றிற்குள் புகுந்தவர்கள் தமது முகத்தை மூடி மறைத்திருந்தனர். வீட்டில் இருந்தவரின் காதுத் தோட்டைக் கழற்றித் தருமாறு அச்சுறுத்தி பறித்துள்ளனர். குறித்த வயோதிபரையும் தம்மோடு இழுத்துச் சென்று அவரைக் கொண்டு அருகில் உள்ள வீட்டினரை அழைத்து கதவைத் திறக்கச் செய்துள்ளனர்.

பக்கத்து வீட்டுக்காரர்கள் கதவைத் திறந்ததும் அங்கும் புகுந்த திருடர்கள் அவர்கள் அணிந்திருந்த ஐந்து பவுன் தங்க நகைகளையும் பதினெட்டாயிரம் ரூபா பணம் என்பனவற்றை அங்கு கொள்ளையடித்துள்ளனர். பின்னர் அங்கிருந்து சற்றுத் தொலைவிலுள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்து அங்கிருந்த இரு சகோதரர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு அவர்களின் வீட்டிலும் கொள்ளையடித்தனர்.

இரண்டாவது வீட்டில் கொள்ளை இடம்பெற்றபோது மாமடு பொலிசாருக்கு அயலில் ஏதே பிரச்சினை நடக்கிறது என்று சிலர் அறிவித்துள்ளனர். எனினும் சம்பவ இடத்திற்குப் பொலிசார் வருகை தரவில்லை.

அதிகாலை மூன்றாவது வீட்டில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்று இரு சகோதரர்கள் மீது தாக்குதல் இடம்பெற்றபோது கிராம மக்கள் 119 க்கு அழைப்பு ஏற்படுத்தி முறையிட்ட பின்னரே இன்று அதிகாலை பொலிசார் சம்பவ இடத்திற்கு வருகை தந்தனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் காயமடைந்த இருவர் வவுனியா பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாமடு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆகவே, ரணில் விக்கிரமசிங்க கடன் நெருக்கடியில் உள்ள நாட்டை கடன் வாங்கியே மீட்பதாக காண்பிக்கின்றார். உண்மையில் அவர் நாட்டை மீட்கவில்லை. மாறாக அவர் நாட்டில் பெரும் கடன் வெடிகுண்டை உருவாக்குகின்றார். இந்த வெடி குண்டு அடுத்த ஜனாதிபதி தேர்தலுடன் வெடித்துச் சிதறும். அப்போது ஒட்டுமொத்த நாடுமே சீரழியும் பேராபத்து ஏற்பட்டுள்ளது – என்றார்

## உள்ளூராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளன என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலத்தை ஆணையாளர்களின் கீழ் கொண்டு வருவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உடன்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார காலத்தை நீடிக்குமாறு கடந்த வாரம் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அலரி மாளிகையில் சந்தித்து அறிவித்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மேலும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், தற்போதுள்ள சட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலத்தை நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

## வவுனியா குளத்தில் சடலம் மீட்பு

வவுனியாவில் குளத்தில் மிதந்த ஆண் சடலம் பொலிஸாரால் மீட்கப் பட்டு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. அது யாருடைய சடலம் என்று அடையாளம் காணப்படவிலல்லை.

குளத்தின் வான் கதவுப் பகுதியில் சடலமொன்று கிடப்பதை கண்ட அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

சடலத்தில் இருந்து துர்நாற்றம் வீசத் தொடங்கிவிட்டதால் சில நாட்களுக்கு முன்னர் இறந்தவரின் சடலமாக அது இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# ஆசிரியர் இடமாற்ற சபை உடன் கலைக்கப்பட்டது

## ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைவாக

கல்வி அமைச்சின் ஆசிரியர் இடமாற்ற சபையை உடனடியாக அமுலாகும் வகையில் கலைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத் துள்ளார். அதற்கமைய ஆசிரியர் இடமாற்று சபையின் பரிந்துரைக்கமைய நடைமுறைப் படுத்தப்படவிருந்து 12,500 ஆசிரியர்களின் அனைத்து இடமாற்றங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரம் மற்றும் உயர் தர மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் கடந்த காலங்களில் பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட் டுள்ளன. எனவே, தற்போது ஆசிரியர் இடமாற்றமும் வழங்கப்பட்டால் அது மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் , அதனைத் தவிர்ப்பதற்காக ஜனாதிபதியால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிகளால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து சிக்கல்கள் , செலவுகள் அதிகரித்துள்ளமை, வரி மற்றும் வாடகை வீட்டு பிரச் சினைகள் உள்ளிட்ட மனி தாபிமானக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த இடமாற்றங்கள் தற் காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு உள்ளூ ராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்பார்த்துள்ள ஆசிரியர்களும் இடமாற்றத்திற்குள் உள்வாங்கப் பட்டுள்ளனர் எனவும் தெரிவிக் கப்பட் டுள்ளது. இதன் காரணமாக சில இடமாற்றங்கள் அரசியல் ரீதியில் நோக்கப்ப டும் என்பதால் அதனைத் தவிர்ப்பதற்காகவும் இந்த தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள் ளார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சகல காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி ஆசிரியர் இடமாற்ற சபையை கலைப்பதற்கு நட வடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியால் விடுக்கப் பட்ட இந்த பணிப்புரை தொடர்பில் கல்வி அமைச் சின் உயர் அதிகாரியொருவ ரிடம் வினவிய போதே இந்த விடயங்கள் தொடர்பில் தெரி விக்கப்பட்டன.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# அனுமதியின்றி கட்டப்பட்ட சிலையால் சர்ச்சை

வவுனியா நகரில் அனுமதியின்றி கட்டப்பட்ட பத்மநாபாவின் சிலை தொடர்பில் கவனம் செலுத்திவிட்டு, நாளாந்த வாழ்வாதாரத்துக்காக வியாபாரம் செய்யும் வீதியோர வியாபாரிகளை அகற்றுங்கள் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கு.திலீபன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், அங்கு மேலும் கூறுகையில் –

போராடிய தலைவர்களுக்கு சிலை வைப்பதை நான் எதிர்க்கவில்லை. ஆனால், முறையான அனுமதிகள் பின்பற்றப்பட்டனவா என்பதே என்னுடைய கேள்வி.

குறிப்பாக, வவுனியா மாவட்டத்தில் ஓட்டோவை வாழ்வாதாரமாக கொண்ட ஓட்டோ சங்கத்துக்கு அலுவலகம் அமைக்கப்பட்டபோது முறையான அனுமதி பெறப்படவில்லை எனத் தெரிவித்து, அந்த கட்டுமானப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டன.

நகரசபை, நாளாந்த வாழ்வாதாரத்துக்காக வியாபாரம் செய்யும் வீதியோர வியாபாரிகள் மற்றும் தள்ளு வண்டி வியாபாரிகளைக் குற்றவாளிகள் போல் நடத்தி, அவர்களது பொருள்களுக்கும் சேதம் விளைவித்து, அள்ளிச் செல்கிறது.

அவ்வாறு சட்டப்படி இயங்குவதாக இருந்தால் வவுனியா மணிக்கூண்டு கோபுர சந்தியில் பத்ம நாபாவின் சிலை வைப்பதற்கு முறையான அனுமதி பெறப்பட்டதா?

நகரசபை செயலாளர் மற்றும் நகரசபையினர் என்ன செய்கின்றனர்? உள்ளூராட்சித் திணைக்களம் என்ன செய்கிறது? இது தொடர்பாக பொலிஸாருக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆகவே, முறையற்ற விதத்தில் இந்த சிலை அமைக்கப்பட அனைவரும் ஒத்துழைத்துள்ளார்கள். ஆனால், அப்பாவி மக்களுக்கு எதிராக சட்டத்தை காவித் திரிகிறார்கள். இனிமேல் வவுனியா நகரில் வீதியோர வியாபாரிகளை நகரசபை அகற்றுவதாக இருந்தால், முதலில் முறையான அனுமதியின்றி அமைக்கப்பட்ட சிலையை அகற்றுங்கள். அதனை அகற்றாமல் விட்டால், வீதியோர வியாபாரிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தக் கூட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், உள்ளூராட்சி மன்ற பணிப்பாளர், திணைக்கள தலைவர்கள், நகரசபை செயலாளர், பிரதேச சபை செயலாளர், பொலிஸ் அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வலி. கிழக்கு பிரதேசத்தில் 3 ஸ்மார்ட் முன்பள்ளிகள்

## சபையால் அடுத்த வாரம் முதல் தொடக்கம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் நேரடியாக முகாமைசெய்யப்படும் மூன்று முன்பள்ளிகளும் ஸ்மார்ட் முன்பள்ளிகளாக எதிர்வரும் வாரம் முதல் இயங்கும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

முன்பள்ளிகளை வலுப்படுத்தும் எமது சபையின் செயற்றிட்டத்துக்கமைய, சபை நிதி மூலம் 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மூன்று ஸ்மார்ட் போட்கள் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றை பிரதேச சபையின் நேரடி முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் ஆவரங்கால் அரிச்சுவடி முன்பள்ளி, இருபாலை சிகரம் முன்பள்ளி, அச்சுவேலி கஜமுகன் முன்பள்ளிகளுக்கு பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தாயகத்தில் முன்பள்ளிக் கல்வியைக் கட்டியெழுப்ப வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாக உணர்கின்றோம். ஏற்கனவே எமது சபை இருபாலை சிகரம் முன்பள்ளியை ஒரு கோடி ரூபா வரையான செலவுடன் புதிதாக அமைத்து திறந்து வைத்துள்ளது.

மேலும், அரிச்சுவடி முன்பள்ளி அமைப்புக்காக 60 லட்சங்களுக்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது. கஜமுகன் முன்பள்ளியும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிகள் மாகாண மட்டத்தில் பேட்டி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட சிறப்புத் தேர்ச்சி மிக்க ஆசிரியர் குழாத்தின் ஊடாக இயக்கப்படுகின்றன.



இந்த முன்பள்ளிகளில் பல லட்சம் ரூபாக்கள் செலவிடப்பட்டு நவீன விளையாட்டு உபகரண தொகுதிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலாக இந்த முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவச சீருடை, சத்துணவுத் திட்டம், கல்விச் சுற்றுலா என்பவற்றையும் சபை மேற்கொள்கின்றது.

வருமான ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் பிள்ளைகளும் வசதி வாய்ப்புள்ள குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகள் பெறும் வாய்ப்புக்களை பாரபட்சமின்றி பெற வேண்டும் என்ற நோக்கில் நாம் இந்த முன்பள்ளிகளில் கல்விக்கான முதலீடுகளை நிதிப்பற்றாக்குறை சவாலினையும் எதிர்கொண்டு பயன்படுத்துகிறோம். இந்நிலைமையை பிரதேச மக்கள் உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும். –என்றார்.

# பண்ணைகளை கைவிடும்நிலை கோழி வளர்ப்பாளர்கள் கவலை

உற்பத்திச் செலவு அதிகம், முட்டை விலையோ குறைவு என்பதால் கோழிப் பண்ணைகளைக் கைவிடவேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளனர் என்று புத்தளம் கோழிப் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

முன்னர் 3500 ரூபாவாக இருந்த கோழித்தீவனத்தின் விலை தற்போது 18 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளமையால் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இதனாலேயே முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும் முட்டைப் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கோழித் தீவனத்தின் விலையேற்றம் காரணமாகப் பல முட்டைப் பண்ணையாளர்கள் தமது தொழிலைக் கைவிட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய சூழ்நிலை தொடர்ந்தால் தாமும் தொழிலை கைவிடும் நிலைக்கு தள்ளப்படலாம் என புத்தளம் பிரதேச முட்டைப் பண்ணையாளர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை நுகர்வோர் அதிகார சபையால் 44 முதல் 46 ரூபா வரை முட்டையை விற் பனை செய்வதற்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட் டுள்ளதால் தம்மால் குறித்த விலைக்கு முட்டையை விற்க முடியாமல் உள்ளது என்றும் முட்டைப் பண்ணையாளர்கள் கூறியுள்ளனர்.

இத்தகைய பிரச்சினைகள் தீர, கோழித் தீவனத்தின் விலையைக் குறைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு முட்டைப் பண்ணையாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விருந்து வைபவத்தில் கொழும்பில் மோதல்

## இளைஞர் சாவு



கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் இடம்பெற்ற விருந்து வைபவம் ஒன்றின் போது ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படும் சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞனின் அடையாளம் இதுவரை உறுதிப் படுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவ தினமான நேற்று, கொழும்பு போர்ட் சிட்டி வளாகத்தில் சிலர் விருந்து வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இதன்போது இடம்பெற்ற தாக்குதலில் குறித்த இளைஞன் படுகாயமடைந்துள்ளார் எனக் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் துறைமுக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்குப் புதியவர்கள்

இலங்கையின் பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மூத்த வங்கியாளர் பைசல் சாலியின் தலைமை யில் உள்ள இந்த ஆணைக் ஷகுழுவிற்கு சுஜீவ முதலிகே, ராஜீவ் அமரசூரிய மற்றும் ஷனில் அன்டனி பெர்னாண்டோ மற்றும் அன்டன் கோட்ஃபிரே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுஜீவ முதலிகே மற்றும் ரஜீவ் அமரசூரிய ஆகிய இருவரும் இதற்கு முன்னர் ஆணைக்குழு உறுப்பினர்களாகவும், னில் அன்டனி பெர்னாண்டோ மற்றும் அன்டன் கோட்;ஃபிரே ஆகியோர் முன்னர் கொழும்பு பங்குச் சந்தையின் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் பணியாற்றியுள்ளனர். அத்துடன், மணில் ஜெயசிங்கவும் ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்ட உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றவுள்ளதோடு, திறைசேரி துணை செயலாளர் ஆர்.எம்.பி. ரத்நாயக்க மற்றும் மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பெர்னாண்டோ ஆகியோர் நியமன உறுப்பினர்களாகத் தொடர்ந்தும் செயற்படவுள்ளனர்.

அதேவேளை நிறுவனங்களின் பதிவாளர் நாயகம் சஞ்சீவ திஸாநாயக்க மற்றும் சஞ்சய பண்டார ஆகியோர் உத்தியோகபூர்வ உறுப்பினர்களாக சேவையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை சாதகமான தீர்மானத்தினை எடுக்கும்!

## அலி சப்ரி நம்பிக்கை

சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபை இலங்கைக்கு சாதகமான தீர்மானத்தை எடுக்கும் என்று பெரும் எதிர்பார்ப்பில் இருப்பதாக வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி அதீத நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபை நாளை (திங்கட்கிழமை) கூடவுள்ள நிலையில் இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர்கள் வழங்குவது தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி, நாம், சர்வதேச நாணயநிதியத்துடன் பலசுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். அதில் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டிருக்கின்றோம். குறிப்பாக, சர்வதேச நாயணநிதியத்துடனான ஆரம்பக்கட்டப் பேச்சுகளில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாரமன் கலந்துகொண்டார். தொடர்ந்து நடைபெற்ற பேச்சுக்களில் பணியாளர்மட்ட ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதன்பின்னர் எமக்கான நிவழங்குவதற்குரிய வரையறைகளை படிப்படியாக முன்னெடுத்துள்ளோம். அத்துடன், இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட பாரிய கடன்வழங்குநர்கள் கடன்மறுசீரமைப்பு உறுதிப்பாட்டுக் கடிதத்தை வழங்கியுள்ளார்கள். அந்த விதமான செயற்பாடுகளின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக் கொள்வதற்கான அனைத்து செயற்பாடுகளையும் முறையாக பூர்த்தி செய்துள்ளோம்.– என்றார்.

# பொது நிர்வாக அமைச்சின் செயலருக்கு திடீர் இடமாற்றம்



பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹபுஹின்னவுக்கு அரசாங்கத்தினால் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் அவர் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டு, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கான பதவி நிலை குறித்து இதுவரை தெரிய வரவில்லை.

பொதுநிர்வாக அமைச்சின் பதில் செயலாளராக அதன் தற்போதைய மேலதிக செயலாளர் கே.டி.என் ரஞ்சித் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் பொது நிர்வாக அமைச்சுக்கு புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்மை குறிப்பிடத்தக்கது.

# நாணய நிதிய இணக்கப்பாடு, உள்ளடக்கங்கள் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு!

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறுகிறார்

சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டின் உள்ளடக்கங்களை அடுத்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப் பார் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சர்வதேச நாணய நிதியம் எமது அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாட்டின் உள்ளடக்கங்களை அவர்களின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவேற்றியவுடனேயே அதனை நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம்.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பார். இதில் எவ்வித இரகசியமும் இல்லை.

நாடு என்ற ரீதியில் அனைவரும் இது தொடர்பில் அறிய வேண்டும். எதிர்க்கட்சிகளுக்கும், பல்வேறு கருத்துக்களை முன்வைக்கும் ஏனைய தரப்பினருக்கும் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கான சிறந்த சந்தர்ப்பம் கிடைக்கப்பெறும்.



அதற்கமைய இதற்கான மாற்றுத் தீர்வுகள் அவர்களிடம் காணப்பட்டால், அதனை முன்வைப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கவும் அரசாங்கம் தயாராக உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி 8 கட்டங்களாக எமக்கு கிடைக்கப் பெறவுள்ளது. நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதன் பிரதானியாக ஜனாதிபதி செயற்படுகிறார். அதற்கமைய நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு தொடர்பாக அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும். - என்றார்.

# நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் அனைத்து மக்கள் அவைகளும்?

## அச்சம் வெளியிடுகிறது தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு மையம்

நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களும் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் வரும் அபாயம் இருப்பதாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை உடனடியாக நடத்தி அந்த சபைகளை மக்கள் பிரதிநிதித்துவ சபைகளாக மாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஆகவே, தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருப்பதாக அதன் பிரதம செயற்பாட்டாளர் டி.எம். திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறாமல் போகும் அபாயம் இருப்பதாக ஐரெஸ் நிறுவனத்தின் தலைவர் மஞ்சுள கஜநாயக்கவும் குறிப்பிட்டுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நான்காவது ஆண்டில் இன்னும் சிறப்பாக....

காலைக்கதிரின் மாலைப் பதிப்பு தனது நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. ஒரு நாளாந்தப் பத்திரிகையை வெளியிடுவதே பெரும் சவால் என்கிற நிலையில் நாளாந்தம் இரண்டு பத்திரிகைகளை வெளியிடும் மிகப் பெரும் சவாலை காலைக்கதிர் கடந்த நான்கு ஆண்டுகளாக வெற்றிகரமாகக் கடந்திருக்கிறது.

பல ஏற்ற இறக்கங்களுடன் கூடிய பயணம்தான், என்றாலும் கொரோனா, பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு மத்தியில் இந்தப் பயணம் திரும்பிப் பார்க்கும்போது ஒரு கனதியான, காத்திரமான பயணத்தைக் காட்டிநிற்கின்றது. பயணித்திருக்க வேண்டிய தூரத்தில் பாதியளவாவது கடந்திருக்கிறோமா என்றால் நிச்சயமாக இல்லை.

இந்தப் பயணத்தில் எமக்கு முன்னோடிகள் எவரும் இல்லை. நாமேதான் பாதையை உருவாக்கிப் பயணிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். டிஜிட்டல் வடிவத்தில் ஒரு பத்திரிகையை வெளியிடுவதிலும் காலைக்கதிரே இலங்கையில் முன்னோடியாக இருந்திருக்கிறது. அதுபோலவே மாலைப் பதிப்பை வெளியிடுவதிலும் காலைக்கதிரின் மாலைப் பதிப்பின் டிஜிட்டல் பதிப்பே முன்னோடி.

அதனால் இந்தப் பயணம் சாண் ஏற முழம் சறுக்கும் வகையிலேயே அமைந்திருக்கிறது. திசை தெரியாத காட்டில் நின்று நீடித்துப் பயணிப்பதென்பது (சர்வைவல்) மிக முக்கியமானதாக இருந்திருக்கின்றது. இவ்வளவு நாளும் அத்தகைய பயணத்திலேயே எமது காலம் கழிந்திருக்கிறது. இந்தச் சவால் மிக்க காலத்தில் நாட்டின் பொருளாதார நிலைமை எம்முன் விரித்த சவால்கள் இன்னும் இன்னும் அதிகம்.

அச்சுப் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு மாலைப் பதிப்பின் அச்சுப் பதிப்பை மட்டுமல்ல காலக்கிரமத்தில் காலைப் பதிப்பின் அச்சுப் பதிப்பையும்கூட நிறுத்திவிடும் நிலைமைக்கு எம்மைத் தள்ளியுள்ளது. பாரம்பரியமாக அச்சுப் பதிப்பையே பத்திரிகை என்று பழகிவிட்ட எம் மக்கள் மத்தியில் காலையும் மாலையும் டிஜிட்டல் வடிவில் ஒரு முழுமையான பத்திரிகையை வெளியிட்டுப் பழக்கி, வாடிக்கையாக்குவதுதான் காலைக்கதிரின் மாலைப் பதிப்பு செய்திருக்கும் சாதனை என்று நினைக்கின்றோம்.

இன்று, குறிப்பிட்ட நேரம் தாண்டிவிட்டால் பத்திரிகையைக் காணவில்லையே என்று வரும் அழைப்புக்களும் குறுந்தகவல்களும் புலனப் பதிவுகளும் மாலைப்பதிப்பின் இடம் எங்கே இருக்கின்றது என்பதை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. அந்த அன்புக்குக் கடமைப்பட்டவர்களாக இதனை இன்னும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் தொழில்நுட்ப நேர்த்தியுடனும் வளர்ப்பதே எமது நோக்கமும் அவாவும்.

அதற்கான முயற்சிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. விரைவில் அந்த மாற்றங்களை வாசகர்கள் பார்க்க முடியும் அனுபவிக்க முடியும் என்று நம்புகின்றோம். அதற்கான உங்கள் அன்பையும் ஆதரவையும் எப்போதும்போல் ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

# மக்களாணையை மலினப்படுத்தினால் விளைவு பாரதூரமானதாக அமையும்!

## ஜனாதிபதியை எச்சரிக்கிறார் குமார வெல்கம

ஏப்ரல் 25 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறாது. 2024 ஆம் ஆண்டு இறுதி பகுதியில் ஜனாதிபதி தேர்தலே இடம் பெறும். தேர்தலை பிற்போட்டு மக்களாணையை ஒருபோதும் வெல்ல முடியாது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்கிக் கொள்வார் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

பத்தரமுல்ல பகுதியில் உள்ள நவ லங்கா சுதந்திர கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனநாயக போராட்டத்தின் ஊடாகவே நாட்டு மக்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேற்றினார்கள்.



கோட்டாபய ராஜபக்ஷ தகைமையற்றவர் என்பதை நான் முதன் முதலாக குறிப்பிட்டேன். சிரேஷ்டத்துவத்திற்கு மதிப்பளித்து சிறந்த நபர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டேன்.

கட்சி சிரேஷ்டத்துவத்திற்கு முன்னுரிமை வழங்காமல் குடும்பத்துக்கு முன்னுரிமைவழங்கிமஹிந்த ராஜபக்ஷ 2019ஆம் ஆண்டு ஜனாதிபதிவேட்பாளராக கோட்டாபயராஜபக்ஷவை கள மிறக்கினார்.

பெறுபேறு இரண்டரை வருடத்துக்குள் முழுநாடும்வங்குரோத்து நிலை அடைந்து ராஜபக்ஷர்களின் அரசியல் பலவீனமடைந்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தற்போதைய பிரதானபேசுப்பொருளாக உள்ளது. தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கைகளைமுன்னெடுத்தாலும், தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் பாரிய தடைகளை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்எதிர்வரும்ஏப்ரல்மாதம் 25 ஆம் திகதி இடம்பெறாது. எப்போதும் இடம்பெறும் என்றும் குறிப்பிட முடியாது.

2024ஆம்ஆண்டுஇறுதி பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். இழக்கப்பட்ட தனது அரசியல் செல்வாக்கை பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தடையாக செயற்படுகிறார்.

தேர்தலை பிற்போட்டு மக்களாணையை ஒருபோதும் வெல்ல முடியாது என்பதை ஜனாதிபதி ரணில் விளங்கிக் கொள்ள வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெறும் என்ற அச்சத்தால் நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலைப் பிற்போட்டது.

இதன் தாக்கத்தை ஐக்கிய தேசியக் கட்சி 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் எதிர்கொண்டது. ஆகவே குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மக்களாணையைமலினப்படுத்தினால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும் என்றார்.

# படித்தவர்கள் பண்பாக நடந்தால் எந்தவித பிரச்சினைகளும் வராது

## யாழ்ப்பாணத்தாருக்கு ஆறு.திருமுருகன் 'அட்வைஸ்'

யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் எல்லாம் பண்பாக நடந்தால்எந்த ஒரு பிரச்சனையும் வராது என கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின்வேண்டுகோளுக்கு இணங்க தனியார் நிறுவனம் ஒன்றால் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையினை வைபவரீதியாக திறந்து வைத்த பின் சிறப்புரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

எங்களிடத்தில் ஆசன போட்டி இடம்பெறுகின்றதே தவிர எங்களிடத்தில் ஒற்றுமை இல்லை யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் எல்லாம் பண்பாக நடந்தால் எமக்கு எந்த ஒரு பிரச்சனையும் வராது.



வரலாறுகளைக்கைவிட்டு விட்டோம். எங்களுடைய வரலாறுகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். வார்த்தைகளில் பிரயோசனம் இல்லை. செயல் வீரர்கள் தான் வேண்டும், அரசியலுக்கு அப்பால் வள்ளுவனுக்கு ஓர் அருமையான சிலை வைத்துள்ளார்கள்.

எங்களுக்கு ஒரு குறையும் இல்லை. கடவுள் எங்களைக் கைவிடவில்லை. நாங்கள் அடித்து துரத்தப்பட்டு அவலப்பட்டு ஒரு சிறுபையோடுபுலம்பெயர்ந்தசமூகம் இன்று கோடான கோடியைக் கொடுத்து இந்த மண்ணில் எவ்வளவு கோயில்களைக் கட்டுகிறார்கள்.

பாடசாலைகளை அலங்கரிக்கிறார்கள் எப்படி எல்லாம் வாழ்ந்த கிராமங்களை எழுச்சி பெற செய்கின்றார்கள். இன்று கடவுள் அருளால் கடல் கடந்து கண்டம் கடந்து போனவர்களுக்கு இன்றைக்கு ஒரு சக்தி பிறந்திருக்கிறது.

இன்று ஆட்சியாளர்கள் – நாடு கூட – அவர்களைத் தான் தேடுகின்றார்கள். இந்த நாட்டினுடைய அரசு புலம் பெயர் தமிழர்களைக் கூப்பிடுகிறது, நீங்கள் முதலிட்டால் இந்த நாடு நிமிருமென்று. எனவேதான் இந்த நாட்டை அடகு வைத்தவர்கள் அடகை மீட்பதற்கு யாரைக் கூப்பிடுகிறார்கள் என்றால் அவலப்பட்ட தமிழர்களைத் தான் இன்றைக்கு கூப் பிடுகின்றார்கள். அழுத எமது கண்ணீருக்கு தீர்வு கிடைத்திருக்கின்றது. எனவே நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை மொழி குறித்து சபையில் விவாதம்

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி கட்டளைகளை எதிர்வரும் 21 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றகூட்டத்தொடரை எதிர்வரும் 21 ஆம் திகதி செய்வாய்க்கிழமை முதல் 24ஆம் திகதி வரை கூட்டுவதற்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய நாடாளுமன்றம் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கூடவுள்ளதுடன் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்துசட்டக்கல்விப்பேரவைக்கட்டளைச்சட்டத்தின் கீழ் 2208 -13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட விதிகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதன் பின்னர் பி.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் நாடாளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் விசாரிப்பதற்கும் அது தொடர்பில் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல் பற்றிய தீர்மானம் அங்கீகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் வெளியிடப்பட்ட 2313-47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுக்கப்படவிருக்கின்றன என பதில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறும். மார்ச் 22ஆம் திகதி புதன்கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்களுக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகள் 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான 06 தீர்மானங்கள் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2312-75 இலக்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானம் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மார்ச் 23 ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்களுக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணிவரை 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2308- 08 ஆம் இலக்க வர்த்மானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி மற்றும் 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2310/30 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் அரசின் பல்வேறு சட்ட நிறுவனங்களின் ஆண்டு அறிக்கைகள் தொடர்பான மூன்று பிரேரணைகளை முன்வைப்பதற்கும் தனிநபர் சட்டமூலமாக இலங்கை பட்டய போக்குவரத்து நிறுவனம் மற்றும் கல்வி அறக்கட்டளையை கூட்டிணைப்பதற்கான தனியார் உறுப்பினர் சட்டமூலங்களை இரண்டாவது வாசிப்புக்கு முன்வைக்கவும் இங்கு இணங்கப்பட்டது.

இதன் பின்னர் பி.ப 5.00 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

# மியான்மர் மடாலயம் அருகில் 22 பேர் சுட்டுக்கொலை



மியான்மரில் மடாலயத்தின் அருகே 22 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அங்கு நிலவும் இனப் போரில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை இது என்று மியான்மர் இராணுவம் தெரிவிக்கின்றது.

நான்நியண்ட் கிராமத்து மக்களுக்கு மியான்மர் இராணுவம் பாதுகாப்பு அளிக்கும்போது, கரேன் தேசிய பாதுகாப்புப் படை மற்றும் கிளர்ச்சிக் குழுக்கள் அங்கு நுழைந்தன.

பின்னர்கிளர்ச்சியாளர்கள்மடாலயத்தின் அருகே இருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். இதில் சம்பவ இடத்திலே 22 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 3 பேர் புத்த பிக்குகள் என்று தெரிவித்தார்.

இது குறித்த கூடுதல் தகவல் எதையும் மியான்மர் இராணுவம் வெளியிடவில்லை.

எனினும், இது இனப் படுகொலை நடவடிக்கையாக இருக்கு என்று மியான்மர் இராணுவம் தெரிவித்துள்ளது. அதேநேரத்தில், கிளர்ச்சியாளர்கள் அமைப்பு எதுவும் இந்தத்துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்துக்குப் பொறுப்பேற்கவில்லை.

மியான்மரின் ஜனநாயகத் தலைவர் ஆங் சான் சூச்சியை 2021ஆம் ஆண்டு கைது செய்து சிறையில் அடைத்துவிட்டு, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது இராணுவ ஆட்சிக்குழு. இந்நிலையில், ஆங் சான் சூச்சி ஆதரவுத் தலைவர்கள் மற்றும் ஜனநாயகத்திற்காகப் பாடுபடும் பிற தலைவர்களை ஒன்றிணைத்து தேசிய ஒற்றுமை அரசு (ஹிஷீறூ) உருவாக்கப்பட்டது.

இதன் செயல் தலைவராக உள்ள துவா லஷி லா தன்னை மியான்மரின் அதிபராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இந்த நிலையில், துவா லஷி லா தலைமறைவாக வாழ்ந்து வருகிறார்.

இராணுவ ஆட்சி நடைபெற்று வரும் மியான்மரில் ஜனநாயகத்திற்காக போராடிய 2,000 போராட்டக்காரர்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

# அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றுகின்றார் மோடி

**ஜூன் மாதத்தில் அவருக்கு வெள்ளை மாளிகையில் விருந்துபசாரமும்**

அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அழைப்பை ஏற்று வரும் ஜூன் 3ஆவது வாரத்தில் மோடி அமெரிக்கா செல்கிறார். அப்போது அவர் அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார்.

இது குறித்து இந்திய வெளியுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவித்ததாவது:

ஜூன் 21 சர்வதேச யோகா தினம்கொண்டாடப்படஉள்ளது. இதையொட்டி ஜூன் 21 முதல் 25 வரை பிரதமர் மோடி அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்வார். பிரதமரின் பயண திகதிகள் விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும்.

அமெரிக்க பயணத்தின்போது அந்த நாட்டின் நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுவார். அதிபர் ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் அவருக்கு இரவு விருந்து அளிப்பார். அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடுகளின் தலைவர்களுக்கு மட்டுமே வெள்ளை மாளிகையில் விருந்து அளிக்கப்படும்.

வரும் மே மாதம் குவாட் கூட்டமைப்பின் உச்சி மாநாடு ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ளது. இதில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா ஆகிய 4 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். இந்த மாநாட்டின்போது பிரதமர் மோடியும் அதிபர் ஜோ பைடனும் சந்திக்க உள்ளனர்.


கடந்த டிசம்பர் 1 ஜி-20 அமைப்புக்கு இந்தியா தலைமை ஏற்றது. இதன்படி வரும் செப்டம்பரில் இந்தியாவில் ஜி -20 உச்சி மாநாடு நடைபெற உள்ளது. அப்போதும் அதிபர் பைடனும் பிரதமர் மோடியும் சந்தித்துப் பேச உள்ளனர்.

தற்போது ஜி-20 அமைப்புக்கு இந்தியா தலைமையேற்றுள்ள நிலையில் ரஷ்யா, உக்ரைன் இடையே அமைதியை ஏற்படுத்த பிரதமர் நரேந்திர மோடி ராஜ்ஜிய ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இந்நிலையில், வரும் மாதங்களில் இருநாட்டு தலைவர்களும் உக்ரைன் போர் குறித்து விவாதிப்பார்கள். இவ்வாறு வெளியுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# உணவுப் பாதுகாப்பு சவாலுக்கு சிறு தானியங்கள் தீர்வளிக்கும்

**இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு**



உணவு பாதுகாப்பு சவால்களுக்கும், தவறான உணவுப் பழக்கத்தால் ஏற்படும் வாழ்வியல் நோய்களுக்கும் சிறுதானியங்கள் தீர்வளிக்கும் என்று இந்தியப் பிரதமா நரேந்திர மோடி தெரிவித்தார்.

குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கிடைப்பதற்காக இந்தியயப் பாடசாலைகளின் மதிய சத்துணவுத் திட்டத்தில் சிறுதானியங்களைச் சோக்க வேண்டும் என்று அவா அழைப்பு விடுத்தார்.

டில்லியில் உலக சிறுதானியங்கள் (ஸ்ரீஅன்னம்) மாநாட்டை, பிரதமா மோடி சனிக்கிழமை தொடங்கிவைத்தார். 2 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் சிறுதானியங்களின் சாகுபடி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, சிறுதானிய பொருளாதாரம் மற்றும் மதிப்புச் சங்கிலி மேம்பாடு, சிறுதானிய உணவுகளின் ஆரோக்கிய பயன்கள் உள்ளிட்ட அம்சங்களின்கீழ் முக்கிய அமாவுகள் நடைபெறுகின்றன. மாநாட்டை தொடங்கிவைத்த பின், பிரதமர் மோடி தொடர்ந்தது பேசியதாவது:

இந்தியாவின் தொடா முயற்சிகளின் விளைவாக, 2023ஆம் ஆண்டு சாவதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா.வால் அறிவிக்கப்பட்டது.

சர்வதேச சிறுதானிய ஆண்டு கொண்டாடப்பட்டு வரும் இந்த நேரத்தில், சிறுதானிய உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பரப் புயை இந்தியா முன்னெடுத்திருக்கிறது.

நாடு முழுவதும் இருந்து காணொலி வாயிலாக சுமார் 75 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், இந்த நிகழ்ச்சியுடன் இணைந்துள்ளனா. சிறுதானியங்களை 'ஸ்ரீ அன்னம்' என்று இந்தியா அடையாளப்படுத்துகிறது. சிறுதானியம் சாதாரண உணவு அல்ல; மிக முக்கியமானது என்பதே அதன் பொருள்.

சிறுதானியங்கள் ஏழைகளுடனும் கிராமங்களுடனும் தொடாபுடையவை. பழங்குடியினரால் கொண்டாடப்படுபவை. இரசாயனம் இல்லாத வேளாண் நடைமுறைகளுக்கு பெரும் அடித்தளமாக விளங்குபவை. குறைந்த தண்ணீா பயன்பாட்டில், அதிக விளைச்சலைத் தரக்கூடியவை. குறைந்த காலகட்டத்தில் சாகுபடி செய்ய முடிவதுடன், பருவநிலை மாற்றத்தையும் தாங்கி வளர்பவை.

சிறுதானிய ஊக்குவிப்பு பரப்புரையை உலகம் முழுவதற்குமான இயக்கமாக மாற்ற இந்தியா தொடாந்து பணியாற்றி வருகிறது.

இந்தியாவில் இன்று சிறுதானிய உணவுப்பொருள்களின் விற்பனை 30 சதவீதம் அதிகரித்துள்ளது.

நாட்டில் சுமாா 2.5 கோடி சிறு விவசாயிகள் சிறுதானிய உற்பத்தியில் நேரடியாக ஈடுபட்டுள்ளனா. இந்திய சிறுதானிய இயக்கத்தின் வாயிலாக அவாகளின் நலன்களைக் காக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறுதானியங்கள் இப்போது பதப்படுத்தப்பட்ட உணவுகளாக பல்பொருள் அங்காடிகளுக்கும், கடைகளுக்கும் வந்தடைகின்றன.

சிறுதானியங்களுக்கான சந்தை மேலும் உத்வேகம் பெறும்போது, சிறு விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும். இதன் மூலம் கிராமப் பொருளாதாரம் வலுவடையும். கடந்த சில ஆண்டுகளாக, சிறுதானியங்கள் தொடர்பாக 500 புத்தாக்க நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன. சிறிய கிராமங்களில் மகளிா சுய உதவிக் குழுவினர், சிறுதானிய பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடுகின்றனா.

விளைநிலத்தில் இருந்து சந்தைகளுக்கும், ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டுக்கும் சிறுதானியங்களுக்கான வலுவான விநியோகச் சங்கிலி உருவாக்கப்படுவது முக்கியம்.

உலகம் இன்று இருவகையான சவால்களை எதிர்கொண்டுள்ளது. தெற்குலகில் நிலவும் உணவுப் பாதுகாப்பு சவால்களுக்கும், உணவுப் பழக்கங்களால் வடக்குலகம் எதிர்கொண்டுள்ள உடல்நலன் சார்ந்த பிரச்சினைகளுக்கும் சிறுதானியங்கள் தீர்வளிக்கும்.

இந்தியாவின் உணவு தானிய உற்பத்தியில், சிறுதானியங்களின் பங்களிப்பு தற்போது 5-6 சதவீதமே உள்ளது. எனவே, சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க இந்திய வேளாண் ஆராய்ச்சியாளாகள் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும். சிறுதானிய உற்பத்தி ஊக்குவிப்புக்காக உற்பத்தி சார்ந்த ஊக்கத் தொகை திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது.

பல மாநிலங்கள் பொது விநியோகத் திட்டத்தில் சிறுதானியங்களை இணைத்துள்ளன. மற்ற மாநிலங்களும் அதைப் பின்பற்ற வேண்டும் என்றாா பிரதமர் மோடி.

இந்தியாவில் 170 லட்சம் டன்னுக்கும் அதிகமாக சிறுதானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உலகளாவிய உற்பத்தியில் இது 20 சதவீதமாகும். ஆசிய அளவில் 80 சதவீதமாகும்.

டில்லியில் நடைபெறும் உலக சிறுதானிய மாநாட்டில் கயானா, மாலத்தீவு, இலங்கை, சூடான், காம்பியா உள்ளிட்ட நாடுகளின் விவசாய அமைச்சாகள் பங்கேற்றுள்ளனர்.



# ஈக்வடோரில் நிலநடுக்கம் இதுவரை 14 பேர் இறப்பு

தென் அமெரிக்க நாடான ஈக்வடோரில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் இதுவரை 13 பேர் உயிரிழந்தனர்.

ஈக்வடோரில் இன்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.8 ஆக பதிவாகியது. இதன் ஆழம் 66.4 கிமீ.. நில நடுக்கத்தினால் இதுவரை 14 பேர் உயிரிழந்துள்ளனர். 150க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். மருத்துவமனைகள், கல்வி கூடங்கள் என பல கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன என இக்வேடார் தேசிய பேரிடர் மேலாண்மை தெரிவித்துள்ளது. 2016 ஆம் ஆண்டு ஈக்வடாரில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 350 பேர் உயிரிழந்தனர். 2500க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

# ஆசியாவிலேயே மிகப்பெரிய துலீப் தோட்டம் நாளை திறப்பு



ஆசியாவின் மிகப்பெரிய துலீப் தோட்டம் இந்தியாவின் காஷ்மீர் பள்ளத்தாக்கில் பார்வையாளர்களுக்காக நாளை றக்கப்பட உள்ளது.

ஸ்ரீநகரில் அமைந்திருக்கும் மிகப் பெரிய துலீப் தோட்டத்தில், பல வகையான, வண்ண வண்ண நிறங்களில், ஆளை மயக்கும் வாசனையுடன் சுமார் 16 லட்சம் துலீப் மலர்கள் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் வகையில் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீநகரில், ஸபர்வான் பகுதியில், உலகின் மிகப் புகழ்பெற்ற தால் ஏரியின் கரையோரம் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் இந்த துலீப் தோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தோட்டத்தின் பொறுப்பாளர் இனாம்-உல்-ரெஹ்மான் கூறுகையில், துலீப் மலர்கள் தற்போது மலரத் தொடங்கியிருக்கின்றன, பார்வையாளர்களை சொக்கவைக்கும் அழகில் பூத்துக் குலங்கிக்கொண்டிருக்கின்றன என்று தெரிவித்துள்ளார்.

68 வகையான சுமார் 16 லட்சம் துலீப் மலர்கள் இங்கு மலர்ந்துள்ளன. தற்போது நான்கு புதிய வகைகளும் இதில் சேர்ந்துள்ளன.

இங்கு பார்வையாளர்கள் கண்குளிர மலர்களைப் பார்ப்பதோடு, அழகான மலர்களுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

மலர்ப் போர்வை போர்த்தியது போல இந்த தோட்டத்தை உருவாக்க சுமார் நூறுக்கும் மேற்பட்ட தோட்டக்கலைஞர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த தோட்டத்தில் முன்கூட்டியே, மத்தியப் பகுதியில் மற்றும் காலம் தாழ்த்தி மலரும் வகைகள் என பகுதி பகுதியாக நடவு செய்யப்பட்டுள்ளதால், இந்த மாதம் முழுக்க மலர்கள் மலர்ந்து சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு விருந்தளிக்கும் என்று கூறப்படுகிறது.

2020ஆம் ஆண்டு 3.60 லட்சம் சுற்றுலாப் பயணிகள் துலீப் தோட்டத்தைப் பார்வையிட வருகைதந்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2023 இல் வெளியிடப்பெற்றது.